இளசாக, மிருதுவாக, மென்மையாக...

ஒளிநகல் சிற்றிதழ்
குருத்து 2 | ஓலை 3

# குருத்தோலை

வளருவோர்க்கும் வளர்ந்தோர்க்கும்



"உன் பிள்ளை
சுகபோகமாக வாழ, எங்கள்
வாழ்வாதாரத்தை அழித்து
நீ வாழவேண்டும்
என்று நினைக்கிற
**நீ மனிதனா?**"

முன்பதிவிற்கு தொடர்பு கொள்ளுங்கள்...

**Call**

**+91 97917 62788**

# தமிழ் கிறிஸ்தவ குறும்படத் திருவிழா



**நாள்**

**21 டிசம்பர் 2019**

**குறும்படங்களை சமர்ப்பிக்கவேண்டிய கடைசி நாள் 30 நவம்பர் 2019**

## நிபந்தனைகளில் சில...

1. குறும்படம் கிறிஸ்துவின் பிறப்பு எவ்வாறு ஜாதி, மத, கலாச்சார வேறுபாடு இன்றி எல்லாருக்கும் நற்செய்தியாக இருக்கிறது என்ற கருத்தில் கிறிஸ்மஸ் காலத்தில் சமூக வலைதளங்களில் அனைத்து மதத்தவரும் கண்டு புரிந்து கொள்ளும் வகையில் இருக்க வேண்டும்
2. அனைத்து குறும்படங்களும் தமிழ் மொழியிலேயே இருக்க வேண்டும்.
3. அனைத்து குறும்படங்களும் 2 நிமிடங்கள் முதல் 5 நிமிடங்களுக்குள்ளாக இருக்க வேண்டும்.
4. கீழ்க்கண்ட பிரிவுகளில் குறும்படங்களுக்கான பரிசுத் தொகை குழுத்தலைவரிடம் கொடுக்கப்படும்.

   சிறந்த குறும்படம் | இரண்டாவது சிறந்த குறும்படம் | சிறந்த இயக்கம் | சிறந்த ஒளிப்பதிவு | சிறந்த படத்தொகுப்பு

   சிறந்த நடிப்பு (ஆண்) | சிறந்த நடிப்பு (பெண்) | சிறந்த இசை / ஒலிக்கலவை
5. நீங்கள் பங்கேற்பதை http://www.yaway.org/kadugu-registration/ என்ற வலைதளத்தில் உங்கள் மின்னஞ்சல் மற்றும் வாட்ஸப் எண்ணைக் கொடுத்து பதிவு செய்து கொள்ளலாம். அதன் பின்னர் உங்கள் குறும்படத்தை உருவாக்கலாம். நுழைவுக் கட்டணம் ரூ 100 மட்டும் நுழைவுப்படிவம் அனுப்பும் போது செலுத்த வேண்டும்.
6. குறும்படங்களை கிறிஸ்தவ ஊடகத்துறையில் இருக்கும் தொழில் நுட்ப வல்லுனர்கள் மதிப்பிடுவார்கள். அவர்களது தீர்ப்பே இறுதியானது.

பின்னணி இசை, பாடல்கள் (இருந்தால்) மற்றும் பிற படங்கள் அல்லது காணொளிகள் அனைத்துமே குழுவினரது சொந்த படைப்பாக இருக்க வேண்டும். கதைக்குத் தேவையான சில படங்களோ, பாடல்களோ, ஓவியங்களோ பின்னணியில் இடம்பெற்றால் அவை copyleft ஆக இருக்க வேண்டும். அல்லது அவற்றுக்கான உரிமையாளர்களிடம் அனுமதி பெறப்பட்டு இணைக்கப்பட வேண்டும். சில பொருட்களின் தலைப்புகள், விளம்பர வசனங்கள் போன்றவற்றை அனுமதி இல்லாமல் பயன்படுத்துவதும் கூடாது.

முழு நிபந்தனைகளை தெரிந்துகொள்ள...

/kadugu2019 | /kadugu_event

/kaduguevent | kadugu2019@gmail.com



# பொறுப்பாசிரியர் பக்கம்

அன்பு வாசகர்கள் அனைவருக்கும் வணக்கம்.

கடந்த வாரம் நம் அனைவருக்கும் கனத்த வாரமாகிப்போனது. அன்பு மகன் சுர்ஜித்தை நினைத்து கலங்காத மனம் இல்லை. ஜாதி, மத, இன, மொழி வேறுபாடுகளைக் கடந்து சோகத்தையும், அந்தச் சோகத்தின் வழியே பாடத்தையும் நமக்குக் கொடுத்துவிட்டு போயிருக்கிறான் அந்தக் குழந்தை. நமது கையாலாகாத்தனத்தை உலகமே பார்த்தது.


நிலவுக்கும் செவ்வாய்க்கும் ராக்கெட் விடத்தெரிந்த இந்தியாவில், ஹைட்ரோ கார்பன் எடுக்க எல்லா உபகரணங்களும் தயார் நிலையில் இருக்கும் இந்தியாவில், மூவாயிரம்கோடி ரூபாய் செலவு செய்து சிலை வைக்கும் இந்தியாவில், முப்பது அடியில் இருக்கும் குழந்தையை எடுக்க வக்கில்லை என்று எங்கு பார்த்தாலும் அவலக்குரல்கள் எழுவதைப் பார்க்க முடிந்தது.



இந்தியாவில் இது புதிதல்ல. இது கடைசியாகவும் இருக்கப்போவது இல்லை. தகுதியான அரசியல்வாதிகளைத் தெரிந்தெடுக்காமல் ஆயிரம் இரண்டாயிரம் வாங்கிக்கொண்டு நாம் ஓட்டு போட்டுக்கொண்டு இருக்கும்வரை எதுவும் மாறப்போவது இல்லை. நாளை நம் பிள்ளைக்கும் இதே கதிதான். இதையெல்லாம் நினைத்தால் வேதனை பல மடங்கு கூடுகிறது. என்றைக்கு உணரப்போகிறோம் பிரச்சனை நம்மிடம்தான் என்று? ஒரு குற்றமில்லாத ரத்தத்தை நம் தலையில் சுமத்திக்கொண்டோமே! இயேசுவே எங்களை மன்னித்து திருத்துங்க.

இத்தனைச் சோகத்துக்கு மத்தியிலும் சில விஷமிகளின் குரூரமான பதிவுகளைச் சமூக வலைதளங்களில் காண முடிந்தது. “பாவாடைங்க பெத்த பிள்ளைக்காக இவ்வளவு சோகமா? தீபாவளியைக் கெடுக்க கிறிஸ்தவர்கள் செய்த சதி. ஆளுக்கு நாலு கை மண்ணள்ளி போட்டு பையன புதைச்சுட்டு வேலைய பாக்க போங்க.” என்னைப் பொறுத்தவரை இப்படிப்பட்ட பதிவுகளைப் போடுவோர் சமுதாயத்தில் வாழத் தகுதியற்றவர்கள். மக்களோடு மக்களாக வாழும் இவர்கள் சைக்கோக்கள். இப்படிப்பட்ட மோசமான மனநிலை பாதிப்புகளில் இருப்பவர்களைக் கண்டுபிடித்து, காவலில் வைத்து சரியான சிகிச்சை கொடுக்க வேண்டியதும் அரசாங்கத்தின் கடமைதான்.

வேதனையுடன், ஜெஸ்டின்.



# கதை நல்லது – 3

மைக்யெல்

கதை என்பது உண்மைக்கு ஏதோ ஒரு வகையில் தொடர்புடையதாகத்தான் இருக்கிறது. உண்மைக் கதை என்றும் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். உண்மை நிகழ்ச்சியைத் தழுவிய கதைகள் என்றும் சில இருக்கின்றன. முழுக்க முழுக்க கற்பனை எனப்படும் கதைகள்கூட உண்மை அல்லாதவைகள் என்ற முறையில் உண்மையுடன் தொடர்பு கொண்டிருக் கின்றன. உண்மையின் அடிப்படையில்தான் மனிதனின் கற்பனை செயல்பட முடியும். இருப்பதன் அடிப்படையில்தான் இல்லாத ஒன்றைப் பற்றி நாம் கற்பனை செய்ய முடியும்.

உதாரணமாக, மனிதர்களிடம் இல்லாத தன்மைகளுடன் சில தேவதைகளோ, அரக்கர்களோ, மிருகங்களோ, இயந்திரங் களோ இருப்பதாகக் கதைகள் இருக்கின்றன. அல்லது சிறப்பான, மந்திரத்தன்மையுள்ள மனிதர்கள் கதைகளில் இருக்கின்றனர். சில நேரங்களில் மனிதர்களின் குணங்கள் மிருகங்களுக்கோ, இயந்திரங்களுக்கோ அல்லது பிற விஷயங்களுக்கோ கொடுக்கப் பட்டிருக்கிற கதைகள் இருக்கின்றன.

ஒரு காலத்தில் ஒழுக்கம், விதிகள் போன்றவை கற்றுக் கொடுக்கப்பட கதைகள் பயன்பட்டன. ஆனால், இப்போது வெறும் பொழுதுபோக்குக்காக மட்டுமே அதிகமான கதைகள் வருகின்றன. நான் கதைகள் என்று சொல்வது எழுத்தில் உள்ளவைகள் மட்டுமல்ல, சினிமா போன்ற ஊடகங்களையும் சேர்த்துத்தான்.

அடுத்தபடியாக, மனித அனுபவத்திலும் உள்ளான மனதிலும் சில எதிர்பார்ப்புகள், ஏமாற்றங்கள், விதிகள், இவைகள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற உணர்வுகள் இருந்து கொண்டிருக்கின்றன. கடவுளின் படைப்பில் மனித மனசாட்சிக்குள் இருக்கும் சரி, தவறு என்ற உணர்வுகள்தான் இன்னும் நம்மை மனிதர்களாக வைத்திருக்கின்றன. இவற்றில் நல்லது வெற்றி பெறவும் தீமை தோல்வியடையவும் நாம் விரும்புகிறோம். நமக்குள் தீமையான குணங்கள் இருந்தாலும்கூட நமது குற்ற உணர்ச்சியை மறைக்க கதைகளின் நன்மைகளைப் பாராட்டுகிறோம்.

கதைகள் நமக்குத் தரும் உணர்ச்சி களில் பெரும்பாலானவைகள் கடவுள் நமக்குள் வைத்திருக்கும் அவரது சாயலின் காரணமாகத்தான் நமக்குள் இருக்கின்றன. உதாரணமாக, தீமையைக் கண்டு கோபப்படுவதும், இயலாதவர்களைக் கண்டு பரிதாபப்படுவதும், அன்பு காட்டுவதும் நமக்குள் வைக்கப்பட்டிருக்கும் சாயலான

கடவுளின் குணங்கள்தாம். இவை மனிதனின் சுயநலம், தீய குணம், கலகம், கீழ்ப்படியாத தன்மை ஆகியவற்றால்தான் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. வில்லன் இல்லாத கதை ரசிக்காது. அப்படித்தான் தீமை இல்லாத நன்மையைப் பற்றிய கதை நன்றாக இருக்காது. அனைத்துமே உண்மையின் அடிப்படையில்தான் இருக்கின்றன.

பல கதைகள் உண்மையான சம்பவங்கள் பலவற்றைப் பார்த்ததால் உருவானவைகள். சில நேரங்களில் இயற்கையின் சில நிகழ்வுகள் மனித வாழ்வின் சில அம்சங்களைப் பிரதிபலிப்பவையாக இருக்கும், அவையும் கதைகளாக மாறுகின்றன. மிகைப்படுத்தப்பட்ட சில நாயகர்களின் கதைகள் பல்வேறு சூழல்களில் உலவிக் கொண்டிருக்கின்றன.

நம் கலாச்சாரமும்கூட நமது கதை களுக்குக் காரணமாக இருந்திருக்கின்றன. அவற்றின் தனித்தன்மை நமது கலாச்சாரத்தை இன்னும் காத்துக் கொண்டிருக்கின்றது. வடை சுடும் பாட்டியும் காகமும் தமிழ்நாட்டுக்கே உரிய கதாபாத்திரங்கள். பிட்சா சுடும் க்ராண்ட்மாவும், சீ கல் என்ற பறவையும் இங்கேயும் சரி, அங்கேயும் சரி பொருந்தாது, புரியாது. அதனால்தான் கதைகளை உயிர்ப்பிக்க, உறவுகளைக் கட்டி எழுப்ப கதைகளைப் பயன்படுத்துவது மிகவும் முக்கியமானது.

**ஆசிரியர் வல்லிக்கண்ணன் அவர்கள் மொழிபெயர்த்த சிறந்த கதைகள் பதிமூன்று என்ற தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட குஜராத்தி கதை**



## அவன் சட்டையில் இவன் மண்டை...

**பன்னாலால் படேல்**

ஹோலி பண்டிகையின் அந்தி நேரம். கிராமப் பையன்கள் அநேகர், வேப்பமரத்தின் கீழ் கூடிநின்று, ஒருவர் மீது ஒருவர் மண்ணை வாரி வீசி விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

அம்ரித்தும் ஐசபும் கைகோர்த்து வந்தனர். மற்றவர்களோடு சேர்ந்தனர். இருவரும் புதிய ஆடைகள் அணிந்திருந்தார்கள். நிறம், அளவு, துணிரகம்-அனைத்திலும் ஒரே மாதிரியாக விளங்கிய அவை அன்றுதான் தைக்கப்பட்டிருந்தன. இரண்டு பேரும் ஒரே வகுப்பில், ஒரே பள்ளியில் படித்தார்கள். தெருமுனையில் எதிர் எதிராக இருந்த வீடுகளில் வசித்தார்கள். அவர்களின் பெற்றோர் விவசாயிகள். இருவருக்கும் ஒரே அளவு நிலம் இருந்தது. கஷ்ட காலங்களில் சமாளிக்க அவ்வப்போது இருவரும் வட்டிக் காரனிடம் பணம் கடன் வாங்கினார்கள். சுருக்கமாக, இரண்டு பையன்களும் எல்லா விதங்களிலும் சமம்தான். ஆனால், அம்ரித்துக்கு அப்பாவும் அம்மாவும் மூன்று சகோதரர்களும் இருந்தனர். ஐசபுக்கு அப்பா மட்டுமே இருந்தார்.

இரண்டு பையன்களும் வந்து, நடைபாதையில் உட்கார்ந்தார்கள். இருவரும் ஒரே மாதிரி ஆடை அணிந்திருப்பதைக் கண்டதும், "ஏ அம்ரித், ஐசப், நீங்கள் இருவரும் உங்கள் அடையாளங்களை மாற்றிக் கொண்டீர்களா?" என்று இதர பையன்களில் ஒருவன் கேட்டான்.

இது இன்னொருவனுக்கு விஷம எண்ணம் ஒன்றைத் தந்தது. நீங்கள் இருவரும் ஏன் மல்யுத்தம் புரியக் கூடாது? நீங்கள் இரண்டு பேரும் பலத்திலும் ஒரே ஈடாக இருக்கிறீர்களா அல்லது ஒருவன் மற்றவனை விட வலிமை உடையவனா என்று பார்ப்போமே" என அவன் கூறினான்.

இது அருமையான எண்ணம் என முதல் பையன் கருதினான். "ஆமா, அம்ரித், ஐசப். உங்களில் யார் சிறந்தவர் என்று பார்க்கலாம்" என்றான்.

“வாங்க சும்மா வேடிக்கைதான்” என்று வேறொருவன் கத்தினான்.

ஐசப் அம்ரித்தைப் பார்த்தான். “வேண்டாம். என் அம்மா என்னை உதைப்பாள்” என்று அம்ரித் உறுதியாய்ச் சொன்னான்.

அவன் பயம் நியாயமானதே. அவன் வீட்டிலிருந்து புறப்படுகையில் அவன் அம்மா எச்சரித்து அனுப்பினாள். “புது ஆடைகள் வேண்டும் என்று அடம்பிடித்தாய். அவற்றைக் கிழித்தாலோ, அழுக்கு ஆக்கினாலோ உனக்குச் சரியானபடி உதை கொடுப்பேன்” என்றாள்.

அம்ரித் தன் பெற்றோரைப் பாடாய்ப் படுத்தினான் என்பது உண்மைதான். ஐசப் ஒரு புதுச்சட்டை வாங்குகிறான் எனக் கேள்விப் பட்டதும், ஐசப் சட்டை மாதிரியே தனக்கும் ஒன்று வேண்டும், தராவிட்டால் பள்ளிக்கூடம் போகமுடியாது என்று முரண்டு பிடித்தான். அவன் அம்மா எவ்வளவோ எடுத்துச் சொன்னாள். “மகனே, ஐசப் பண்ணையில் வேலை செய்ய வேண்டும். அவன் உடுப்புகள் கிழிந்துள்ளன. உனக்கு எல்லாம் புதுசு மாதிரி நன்றாக இருக்கின்றன” என்றாள்.

அம்ரித் தன் சட்டையிலிருந்த ஒரு கிழிசலை விரலை விட்டுப் பெரிதாக்கியபடி, “யார் அப்படிச் சொன்னது?” என்று கத்தினான்.

அம்மா வேறொரு தந்திரத்தைக் கையாண்டாள். “ஐசபுக்கு புதுச் சட்டை வாங்கித் தருவதற்கு முந்தி அவன் அப்பா அவனை நன்றாக உதைத்தார். உனக்கும் அறை கொடுக்கவா?” என்றாள்.

அம்ரித் பின்வாங்கவில்லை. “சரி. என்னை கட்டிப் போடு. அடிகொடு. ஆனால் ஐசப் சட்டை மாதிரி எனக்கும் ஒன்று வாங்கியாக வேண்டும்“ என்று அவன் திடமாக அறிவித்தான்.

“சரி, போய் உன் அப்பாவிடம் கேள்” என அம்மா தட்டிக் கழித்தாள்.

அம்மா இல்லை என்று சொல்லிவிட்டால், அப்பாவும் சம்மதிக்க மாட்டார் என அம்ரித்



அறிவான். ஆனால் அவன் விட்டுவிடக் கூடியவன் அல்ல. அவன் பள்ளி செல்ல மறுத்தான், சாப்பிட மறுத்தான், இரவில் வீட்டுக்கு வரவும் மறுத்தான். முடிவில், அம்மா மனம் மாறினாள். அவனுக்குப் புதிய ஆடைகள் வாங்கும்படி அப்பாவைக் கட்டாயப்படுத்தினாள். அம்ரித் ஒளிந்து கொண்டிருந்த ஐசப் வீட்டு மாட்டுத் தொழுவத்திலிருந்து அவனை அழைத்து வந்தாள்.

அழகாக ஆடை அணிந்து வீட்டிலிருந்து கிளம்பிய அம்ரித் தனது உடுப்புகளைப் பாழ்பண்ணக் கூடிய எதையும் செய்ய விரும்பவில்லை. முக்கியமாக, ஐசபுடன் சண்டையிட அவனுக்கு மனமில்லை.

அவ்வேளையில், கும்பலின் போக்கிரிப் பையன்களில் ஒருவன் அம்ரித்தின் கழுத்தைத் தன் கையால் வளைத்துக் கொண்டு,”வா, நாம் குஸ்தி போடலாம்“ என்றான். அம்ரித்தைத் திறந்த வெளிக்கு இழுத்து வந்தான்.

அவன் பிடியிலிருந்து நழுவ அம்ரித் முயன்றான். “பார் காலியா, நான் குஸ்தியிட விரும்பவில்லை. என்னை விட்டுவிடு” என்றான்.

காலியா அவனை விட்டுவிட மறுத்தான். அம்ரித்தைப் பிடித்துத் தரையில் தள்ளினான். இதர பையன்கள் மகிழ்வோடு

கூவினார்கள். "அம்ரித் தோத்துப் போனான். காலியா வென்றான்! காலியாவுக்கு வெற்றி! ஜே! ஜே!"

ஐசப் ஆத்திரம் அடைந்தான். அவன் காலியாவின் கையைப் பற்றி, "வா, உன்னோடு நான் சண்டை போடுவேன்" என்றான்.

காலியா தயங்கினான். ஆனால் மற்றப் பையன்கள் அவனைத் தூண்டினார்கள். இரண்டு பேரும் கட்டிப்பிடித்துப் போராடினர். ஐசப் காலியாவின் காலை இடறி, அவனை மண்ணில் குப்புற வீழ்த்தினான். காலியா சத்தமிட்டு அழுதான்.

விளையாட்டாகத் தொடங்கியது வினையாக முடிந்தது என்பதைப் பையன்கள் உணர்ந்தார்கள். காலியாவின் தந்தை அடிக்க வருவார் என்று பயந்து, அவர்கள் நாலாபுறமும் சிதறி ஒடினார்கள்.

அம்ரித்தும் ஐசபும் அந்த இடத்தை விட்டு அகன்றனர். சில அடிதூரம் நடந்ததும், அம்ரித்தின் பார்வை ஐசபின் சட்டை மீது படிந்தது. அதன் பையுடன் வேறு இடத்திலும் நீளமாய் கிழிந்திருந்தது. அவர்கள் மேலே செல்லாமல் அங்கேயே நின்றனர். பயத்தால் அரண்டு போனார்கள். சட்டையின் கிழிசல்களை ஆராய்ந்தார்கள். ஐசபின் அப்பா வீட்டிலிருந்து, "ஐசப் எங்கே?" என்று கூச்சலிடுவது வேறு அவர்களுக்கு கேட்டது.

இருவர் நெஞ்சங்களும் பயத்தால் துடித்தன. தங்களுக்கு சரியானபடி கிடைக்கும் என அவர்கள் அறிவர். ஐசபின் அப்பா சட்டை கிழிந்திருப்பதைக் கண்டதுமே, அவன் தோலை உரித்துவிடுவார். வட்டிக்காரனிடம் அவர் கடன் வாங்கி, நிறைய நேரம் செலவுசெய்து நல்ல துணியாகத் தேர்ந்து, சட்டை தைத்திருந்தார்.

மறுபடியும் ஐசபின் தந்தை கத்தினார்: "யார் அழுவது? ஐசப் எங்கே?"

சட்டென அம்ரித்துக்கு ஒரு யோசனை தோன்றியது. அவன் ஐசபை ஒரு பக்கமாக இட்டுச் சென்றான். "என்னோடு வா. ஒரு விஷயம்" என்றான். இரண்டு வீடுகளுக்கும் இடையிலிருந்த சந்தில் நுழைந்ததும், அம்ரித் தனது சட்டையை கழற்றலானான். "உம், நீ உன் சட்டையை கழற்று. என் சட்டையைப் போட்டுக் கொள்" என்று கூறினான்.

"உன் விஷயம் என்ன? நீ எதை அணிவாய்?" என்று ஐசப் கேட்டான்.

"நான் உன் சட்டையை அணிவேன் என்று பதிலளித்தான் அம்ரித். "சீக்கிரம். யாரும் நம்மைப் பார்ப்பதற்குள் அணிந்து கொள்."

ஐசப் தன் சட்டையைக் கழற்றத் தொடங்கினான். ஆனால் அம்ரித்தின் திட்டத்தைப் புரிந்து கொள்ள இயல வில்லை அவனால். "சட்டைகளை மாற்றிக் கொண்டால் அப்பா உன்னை அடிப்பாரே."

"நிச்சயமாக என்னை அடிப்பார். ஆனால் எனக்கு அம்மா இருக்கிறாள். அவள் என்னைப் பாதுகாப்பாள்" என்றான் அம்ரித்.

அம்ரித்தின் அப்பா அவனை அடிக்க முயல்கையில் அவன் அம்மா பின்னே பதுங்கிக் கொள்வதை ஐசப் அடிக்கடி கவனித்திருக்கிறான். அவன் அம்மாவிடம் ஓரிரு அறைகள் வாங்க நேரிடும். சந்தேகமில்லை. ஆனால் அம்மாவின் மென்மையான அடிக்கும், தன் அப்பாவின் முரட்டுக் கைவேகத்துக்கும் வித்தியாசம் உண்டுதான்.



ஐசப் தயங்கினான். அந்நேரத்தில் அருகே யாரோ இருமுவதை அவன் கேட்டான். இருவரும் வேகமாய் சட்டைகளை மாற்றிக் கொண்டு, சந்திலிருந்து வெளிப்பட்டு, எச்சரிக்கையோடு வீடு நோக்கி நடந்தார்கள்.

அம்ரித்தின் நெஞ்சு பயத்தால் பதைபதைத்தது. அவனுக்கு அதிர்ஷ்டம்தான். அன்று ஹோலிப் பண்டிகை. முரட்டு விளையாட்டு நடக்கத்தானே செய்யும் அவன் சட்டை கிழிந்திருப்பதை அம்மா பார்த்து முகத்தைச் சுளித்தாள். ஆனால் அவனை மன்னித்து விட்டாள். ஊசியும் நூலும் எடுத்து, கிழிசலைத் தைத்தாள்.

பையன்களின் பயம் போய்விட்டது. அவர்கள் திரும்பவும் கை கோர்த்தவாறு, ஊருக்கு வெளியே நிகழும் பண்டிகை சொக்கப் பனையை வேடிக்கை பார்க்கப் போனார்கள்.

சட்டை மாற்றத்தை கண்டு கொண்ட ஒரு பையன், "ஓகோ, நீங்கள் பரஸ்பரம் மாற்றிக் கொண்டீர்களா?" என்று கேலி பண்ணி அவர்கள் மகிழ்ச்சியைக் கெடுத்தான்.

தாங்கள் சட்டைகளை மாற்றிக் கொண்டதை அந்தப் பையன் பார்த்திருக்கிறான் என அஞ்சி, அம்ரித்தும் ஐசபும் நழுவி ஓட முயன்றார்கள். இதற்குள் இதர பையன்களும் அறிந்து விட்டனர். நடந்ததைப் புரிந்துகொண்டு "சட்டை அங்கே, மண்டை இங்கே!" என்று கத்தினர்.



இருவரும் தப்பிச் செல்ல முயன்றனர். ஆனால் அந்தக் கும்பல் அவர்கள் பின்னாலேயே "சட்டை அங்கே மண்டை இங்கே, மண்டை அங்கே, சட்டை இங்கே" என்று கூவியது. விஷயம் அப்பா காதை எட்டும் என அஞ்சிய இருவரும் நண்பர்களும் அவரவர் வீட்டுக்கு ஓடினார்கள்.

ஐசபின் அப்பா, வீட்டு முற்றத்தில், புகை பிடித்தபடி ஒரு கட்டிலில் இருந்தார். அவர் இருவரையும் கூப்பிட்டார். "நீங்கள் ஏன் உங்கள் நண்பர்களிடமிருந்து ஓடி வருகிறீர்கள்? வாங்க, என் பக்கத்தில் உட்காருங்கள்" என்று உத்தரவிட்டார்.

அவரது மென்மையான குரல் பையன் களைக் குழப்பியது. "நாம் பயந்தது சரிதான். அவர் உண்மையை அறிந்திருக்கிறார். பிரியமாக இருப்பதுபோல் பாசாங்கு பண்ணுகிறார்" என்று நினைத்தார்கள்.

ஐசபின் தந்தை, ஒரு பட்டாணியர், பத்து வயது அம்ரித்தைத் தன் கைகளால் அள்ளி அணைத்தார். "வகாலி அண்ணி, இன்று முதல் உங்கள் மகன் அம்ரித் என் பையனும்தான்" என்று உரக்கச் சொன்னார்.

வகாலி அண்ணி தன் வீட்டிலிருந்து வெளியே வந்தாள். சிரித்தாள். "ஹசன் அண்ணா, உங்களால் ஒரு பையனையே வளர்க்க முடியவில்லை; இரண்டு பேரை எப்படிச் சமாளிப்பீர்கள்?" என்றாள்.

"வகாலி அண்ணி, இன்று முதல் நான் இருபத்தோரு பையன்களை வளர்க்கத் தயார். அவர்கள் அம்ரித் மாதிரி இருந்தால்" என்றார் ஹசன். அவரது குரல் உணர்ச்சியால் கம்மியது.

அவர் தொண்டையைச் செருமி விட்டுப் பேசினார். இரண்டு பையன்களும் சந்தினுள் போனதை அவர் பார்த்தாராம். "பையன்கள் என்ன செய்கிறார்கள் என்று கவனிக்க எண்ணினேன்" என்றார்.

அவர் சொல்வதைக் கேட்க அண்டை அயல் பெண்கள் அனைவரும் கூடிவிட்டார்கள்.



அவர் சொல்வதற்கு நெடுநேரம் பிடிக்கவில்லை. பையன்கள் சட்டைகளை மாற்றிக் கொண்டதைச் சொன்னார். ஐசப், 'உன்னை உன் அப்பா அடித்தால் என்ன பண்ணுவாய்?' என்று அம்ரித்தைக் கேட்டான். உங்கள் அம்ரித் என்ன பதில் சொன்னான் தெரியுமா? 'எனக்காவது அம்மா இருக்கிறாளே, காப்பாற்றுவாள்' என்றான்."

கண்களில் நீர் பெருக, அந்தப் பட்டாணியர் கூறினார்: "எவ்வளவு உண்மை! அம்ரித்தின் பதில் என்னை மாற்றிவிட்டது. எது உண்மையான மதிப்பு உடையது என்பதை அவன் எனக்குக் கற்றுத் தந்தான்."

அம்ரித்தும் ஐசபும் கொண்டிருந்த பாசத்தைக் கேள்வியுற்ற பெண்கள் உணர்ச்சி வசப்பட்டார்கள்.

பண்டிகை சொக்கப்பனை பார்த்து விட்டுத் திரும்பிய இதர பையன்கள், அம்ரித்தையும் ஐசபையும் சூழ்ந்தனர். "இவன் சட்டையில் அவன் மண்டை, அவன் சட்டையில் இவன் மண்டை" என்று கூச்சலிட்டார்கள்.

இப்போது அம்ரித்தும் ஐசபும் குழப்பம் அடையவில்லை. மாறாக, அந்தக் கூச்சல்களால் மகிழ்ச்சி கொண்டார்கள்.

அவர்கள் சட்டை மாற்றிக் கொண்ட கதை ஊர் முழுதும் பரவியது. அந்த ஊர் தலைமைக்காரர் அந்தப் பையன்கள் ஊருக்கே ஒரு உதாரணமாக விளங்குவதாய் அறிவித்தார். அம்ரித்துக்கும் ஐசபுக்கும் பெருமை பிடிபடவில்லை!

## சிரிக்க மட்டும்...



காலையில எழுந்திச்சதும் வாய கொப்பளிச்சிட்டு காபி குடிப்பதுதான் என் பழக்கவழக்கம்... அவ்ளோ சோம்பேறித்தனம்...

அம்மா கதறி பாத்தாங்க... முடியல...

கைமாத்தி நீ பாத்துக்கம்மானு சொல்லிட்டு போயிட்டாங்க...

கல்யாணமான நாள்லருந்து டெய்லி சண்ட இதுக்காக (இடையில கொஞ்சம் பல் விளக்கிட்டு காபி குடிச்சதுலாம் நடந்தது... அது அன்பு பாசம்.. பயம்.. அப்புறம்... சென்சார் )



இன்னிக்கி காலைல காபிக்காக கிச்சனுக்குள்ள போறேன்...

அப்பா நீங்க பண்றதுதான் சரியாம்... பல் தேச்ச உடனே காபி குடிச்சா இனாமல் போயிடுமாம்... (hospitalல யாரோ nutritionist சொன்னாங்களாம்)

ந ா ன் ஒரு சயன்டிஸ்ட்னு சொன்னா நம்புறியான்னு நகர்ந்தேன்...

அவளின் பெருமை புன்னகையை ஓரக்கண்ணால் பார்த்தபடியே..

**நீதி: காத்திருங்கள்... சயன்ஸ் உங்கள் தவறுகளைச் சரியாக்கும்.**

பாஸ்கர் சந்தோஷ் ராஜ்

# எது புத்திசாலித்தனம்?

பென்னி அலெக்ஸாண்டர்



"நீ செய்வது தவறு" என்று சொல்வதற்கும் "இவன் பாதை சரியில்லை" என்று சொல்வதற்கும் பெயர்தான் "**எச்சரிக்கை**"

அப்படிச் சொன்னால் அவன் கோபித்துக் கொள்வாவானே என்று ஒதுங்கிக் கொள்வதற்குப் பெயர் "**சுயநலம்**"

ஆராயாமல் எதிர்ப்பது "**மூர்க்கத்தனம்**"

ஆதாயம் கெட்டுவிடும் என்று அவனை ஆதரிப்பது "**கயமைத்தனம்**"

"அவனிடமே சொல், என்னிடம் சொல்லாதே" என்பது "**அலட்சியம்**"

அவனை எதிர்க்க நீ யார் என்று கேட்பது "**அயோக்கியத்தனம்**"

நமக்கெதற்குப் பொல்லாப்பு என்று ஒதுங்குவது "**கோழைத்தனம்**"

அவன் செய்வதும் சொல்வதும் தவறு என்றுகூடத் தெரியாமல் இருப்பது "**மூடத்தனம்**"

ஆராய்ந்து அறிந்து ஏற்றுக் கொள்வது "**புத்திசாலித்தனம்**"!

# அன்புள்ள சுஜித்,

நீ மீண்டுவர வேண்டாம் சுஜித்!

நீ கிறிஸ்தவனாம், உனக்காக ஊடகங்கள் வேலையற்ற வேலையைச் செய்கின்றனராம்!

இந்துக்களின் பண்டிகையைக் கெடுப்பதற்கே குழிக்குள் விழுந்தாயாம்!

தீபாவளி முடிந்ததும் நீ விழுந்திருந்தால்கூட பரவாயில்லையாம்!

இப்படியெல்லாம் அன்பொழுக பேசும் மனிதர்கள் இருக்கும் இவ்வுலகுக்கு நீ வரவேண்டாம் சுஜித்!!!

உன்னை உன் பெற்றோர்தான் குழிக்குள் தள்ளிவிட்டனராம்!

கூலித் தொழிலாளியான உன் தந்தை கட்டுக்கட்டாய் காசு செலவு செய்து அந்த மரணக்குழியை மண்ணிட்டு மூடியது போதாதாம்! கான்கிரீட்டால் மூடியிருக்க வேண்டுமாம்!

கஞ்சி காய்ச்ச வீட்டுக்குள் சென்ற தாய், கண்கொட்டாமல் உன்னையே பார்த்திருக்க வேண்டுமாம்!

மைதானம் இல்லா உன் ஊரில், சோளக்காட்டில்கூட உன் அண்ணன் உன்னோடு விளையாடி இருக்கக் கூடாதாம்!

இவ்வளவு உன்மேல் அக்கறைகொண்டு பேசும் இந்த உலகத்துக்கு நீ வரவேண்டாம் சுஜித்!!!

26 அடியில் இருந்த உன்னை, 100 அடிக்குக் கொண்டு செல்லும் தொழில்நுட்பங்கள்தான் அவர்களிடம் இருக்கிறதாம்!!!

அவர்கள் உன்னை மீட்க என்ன செய்தாலும் நீ 26 அடியிலேயே இருந்திருக்க வேண்டுமாம்!

உன்னை மீட்க எடுத்த முதல் முயற்சியிலேயே நீ வெளியே குதித்து வந்திருக்க வேண்டுமாம்!

முதல் திட்டம் தோல்வியடையும்போதுதான், 2 ஆம் திட்டத்தையே அவர்கள் யோசிப்பார்களாம்! ஆனால் நீ அமைதி காக்க வேண்டுமாம்!

100 அடியை எட்ட 4 நாட்களாய் போராடுபவர்களுக்கு ஒரே நாளில் நீ எப்படி 88 அடி சென்றாய் என்பதை செயல்முறை விளக்கம் அளிக்க வேண்டுமாம்!

நிலாவுக்குச் சென்றுவருவர், செவ்வாய்க்குச் சென்றுவிடுவர். உன்னிடம் மட்டும் வருவது எப்படி என்பது மட்டும் தெரியாமல் இருப்பர். அவர்கள் தெரிந்துகொள்ளும்வரை நீ இருளோடு விளையாடிக் கொண்டிருக்க வேண்டுமாம்!

ஹைட்ரோகார்பன் எடுக்க 4000 மீட்டருக்கும் கீழ் ஆழம் செல்ல அவர்கள் அறிவராம்! ஆனால் உன்னை மீட்கத்தான் இன்னும் முடியவில்லையாம்!!!

இவ்வளவு அறிவுக்கூர்மை நிறைந்த விஞ்ஞான தேசத்துக்கு நீ வர வேண்டாம் சுஜித்!!!

நீ மீண்டு வர வேண்டாம் சுஜித்!!!

அன்புள்ள சுஜித், நீ மீண்டு வர வேண்டாம் சுஜித்!

– ஆல்பிரட் நோபுள்





# மாறிப் போனவைகள் – 3

கார்த்திகா ராஜ்குமார்

உதகையில், அறுபதுகளில் நாங்கள் புது அக்ரஹாரம் என்ற பகுதியில் இருந்தோம். வீட்டிலிருந்து நான்கு நிமிடங்களில் உதகையில் பிரதான சாலையான கமர்சியல் ரோட்டிற்கு வந்துவிடமுடியும். அப்படி வந்து சேருமிடத்தில் இடப்பகுதியில் கிருஷ்ணன் டாக்டர் டிஸ்பென்சரி இருந்தது.

பெரியதொரு கட்டிடத்தின் முதல் பகுதியில் சிறிய முன்னறையைத் தாண்டி உள்போக, சற்று பெரிய அறை வரும் நோயாளிகள் அமர்வதற்கு. இன்னும் சிறிய அறைகள் இரண்டு, ஒரு அறையில் பார்பர் ஷாப் ஜன்னலுக்குப் பின்பாக டாக்டரின் உதவியாளர், கம்பௌண்டர், கண்களை இறுக்கியபடி நிறைய பேசும் ஜோசப் இருப்பார். இன்னொரு அறையில் அமைதியின் மறு ரூபமாய் நம் கிருஷ்ணன் டாக்டர். இப்போது பலருக்கும் பரிச்சயமாயிருக்கிற Mr .Bean ன் 80% முகசாயல். ஆனால் சிரிப்பென்பது மிக அபூர்வமான காரியம் என்பதைப்போல என்றாலும் சாந்தம் தவழுகிற முகம்.

அவரைப் பார்த்தாலே சரியாகிவிடும் என்று நம்பிக்கை தரும் தோற்றத்துடன் இருப்பார். அவர் இங்கிலாந்துக்காரர்கள் வைத்துக்கொள்ளும் தொப்பியுடன் முழு சூட் அணியாத நாட்களை நான் பார்த்ததில்லை. அப்பாவுடன், வீட்டில் யாருக்கு உடம்பு சரியில்லை என்றாலும் பொடியனாக இருந்த என்னைக் கூட்டிப் போவது எங்கள் சம்பிரதாயமாக இருந்தது.

டாக்டர் பேசும்போது அவரையே, அவரிடமிருந்து மிருதுவாய் சன்னமாய் நழுவும் வார்த்தைகளை நான் கவனிக்க வேண்டும். “அவர் வேற என்ன

சொன்னார்'' என்ற கேள்வி எப்போதும் என்னிடம் வரலாம் என்பதால் அவர் முகத்தையே பார்த்திருப்பேன். எவரிடமும் இருபது வார்த்தைகளுக்கு மேல் அவர் பேசி அறிந்திலேன். அப்பாவும் அல்லது மற்றவர்களும் கவலையுடன் சொல்லும் நோயின் அடையாளங்களை, துவக்கங்களை மிக அமைதியாகக் கேட்டுவிட்டு, நாக்கு நீட்ட பார்த்து, பின் நாடி பிடித்து, கருணை ததும்ப தெர்மா மீட்டர் வைத்து கவனித்து, பிறகு பக்கத்து அறையிலிருக்கும் ஜோசப்பிற்கு ஒரு துண்டுச்சீட்டுடன் சில வார்த்தைகள். நம்மிடம் ''சரியாயிடும், மூணுவேளை போதும்'' என்பார். அவரையே பார்த்திருக்கும் என்னை நோக்கி லேசாக புருவமுயர்த்தி, சமயங்களில் உதடுகள் பிரியாமல் கன்னங்கள் குவிய புன்னகையல்லாத புன்னகையை ரகசியம்போல் நழுவவிட்டு தன் அறைக்குப் போய்விடுவார்.

ஜோசப் அவருக்கும் சேர்த்து நம்மிடம் பேசிவிட்டு, கொடுக்கும் ஒன்றிரெண்டு ரூபாய்களை வாங்கிக்கொண்டு, மருந்துகளைக் கலக்கித் தருவார் நாம் கொண்டு போகும் பாட்டில்களில். ரோஸ் கலரிலோ, பாசிப் பயிரின் வெளிறின லேசான பச்சை நிறத்திலோ அது இருக்கும். வியப்பு என்னவெனில், இந்த மருந்துகளில் தீராத உடல் உபத்திரவமே இருந்ததில்லை. அந்த நாட்களில் மருந்துக்குக்கூட மருந்துக்கடைகள் என்பதையே நான் பார்த்த நினைவில்லை.

கிருஷ்ணன் டாக்டர் டிஸ்பென்சரியின் சின்ன முன்னறை பெஞ்சிலிருந்து, அவ்வளவு வெளிச்சமில்லாத நடு



அறையிலிருந்து, ஜன்னலின் வெளிச்சத்தில் விதவித சின்ன பெரிய பாட்டில்களின் பின்னணியில் பாஸ்போர்ட் போட்டோ அளவில் மட்டும் தெரிந்த ஜோசப்வரை மனதில் பதிந்திருந்தாலும், இன்னும் அப்படியே நினைவில் இருப்பது டாக்டரின் கார். "Studebaker Champion" என்று சாம்பல் நிறத்தில் அவர் டிஸ்பென்சரி முன் நிறுத்தப்பட்டிருக்கும். பழைய படங்களில் பார்த்திருக்க முடிகிற நீண்ட கார் அது. அந்த நாட்களில் கார் வைத்திருந்தவர்கள் வெகு குறைவு. எத்தனைமுறை பார்த்தும் சலித்துப் போனதில்லை எனக்கு. வெளியில் காத்திருக்க வாய்த்திருந்த பொழுதுகளில் அதைப் பிரியமாய்ப் பார்த்திருந்திருக்கிறேன் எதற்கு என்று புரியாமலேயே, இன்றுவரை புரியவில்லைதான்.



இந்த நாட்களில் இன்னொரு டாக்டர் இவரைப்போலவே உதகை நகரின் புகழ் பெற்றவராய் இருந்தார். குமாரன் டாக்டர். அவருடைய டிஸ்பென்சரியும் கமர்சியல் ரோட்டில்தான் இருந்தது. அதன் ஒரு பகுதியில் நெட்டாக நீண்டிருந்த கடைகளின் வரிசையில் நடுவில். சற்றுமுன் பேசினவருக்குக் கொஞ்சம்குறைய நேர் எதிரான குணம். ஆனாலும் கைராசிக்காரர் என்பார்கள்.

போகிறவர்களுக்கு முதலில் கத்தல்களும் திட்டும் உபரியாக வழங்கிக்கொண்டே பிரச்சனைகளைக் கேட்பார் உன்னிப்பாக. போகிறவர்களில் உடனிருக்கிற சிறுபிள்ளைகள் பயந்து போகாதிருந்தால் வியப்புதான். முன்னவர் இல்லாத நாட்களில் இவரிடம் அப்பா கூட்டிப்போன நாட்களில், கைகள் நடுங்க மிரண்டு கொண்டிருந்த, அவர் முகத்தையே பார்க்கத் துணியாதிருந்த நினைவுகள் உண்டு. அதற்கு இன்னொரு காரணம், அவர் ஊசி போடுவதை அறிந்திருந்ததினால்தான். அதுவும், ஒரு மிரட்டலுடன் அப்பாவோ மற்றவர்களோ பிடித்துக்கொள்ள ஒரு குறுஞ்சிரிப்பு, வில்லனைப்போல் கையில் ஊசியுடன் நிற்பார். அவரேதான் மருந்தையும் கலக்கிக் கொடுப்பார். அவர் கொடுக்கும் ஒரு மருந்தின் நினைப்பு இன்னும் இருக்கிறது. குடித்ததும் சிலுசிலுவென்று போகிற திரவம் பதுங்கி இருந்து பாய்வதைப்போல தொண்டையைக் கவ்வும், உள்ளே பிய்த்துக்கொண்டு போவதைப்போல. இவரிடம் போயும் குணமடையாதவர்கள் என்று யாரும் இல்லை. அப்பா இவர் புகழ் பாடுவார். இவரைப் போல அருமையானவர் இல்லை என்றாலும், அந்த நாட்களில் அது எனக்கு சம்மதமில்லை என்றாலும், இன்று சரிதான் என்று தோணுகிறது .

ஐம்பது வருடங்களுக்கு முன்பாக இவர்களின் ஆளுமைதான் பிரதானமாய் என்று நினைக்கிறேன் என் நினைவில் எட்டியவரை. அற்புதமான மனிதர்களாய், வருகிறவர்களை நேசிக்கிறவர்களாய், அநேகரின் வாழ்வில் மறக்க முடியாதவர்களாக இருந்தார்கள். இன்று அநேகமாக எல்லா சாலைகளிலும் மருந்துக்கடைகளையும் விதவித சிறப்பு டாக்டர்களையும் உதகை முழுக்க பார்க்க முடியும். என்றாலும்... நிறைய கேள்விகள் பெருமூச்சுடன் எழுவதை மறைக்க முடியவில்லை.



# சமூக ஊடகங்களில் நாம் எப்படி இருக்க வேண்டும்?

✍ பென்னி அலெக்ஸாண்டர்

1. ஊக்குவிக்கவும், திருத்தவும், தெரிவிக்கவும் செய்யுங்கள்.
2. கேலி செய்பவர்கள் மற்றும் அவதூறு செய்பவர்களைப் புறக்கணிக்கவும்; மறக்கவும்.
3. கவனத்தை ஈர்க்கும் பிரிவினைவாதிகள், நாசிஸ்டுகள் மற்றும் பிழையானவர்களைத் தவிர்க்கவும்; விலகவும்.
4. சரியான நபர்களை மற்றவருக்கு அவசியம் அறிமுகப்படுத்துங்கள்.
5. கிறிஸ்துவை உயர்த்துங்கள். வேதாகமம், அன்பு, உண்மை, நற்செய்தி இவை மையமாக இருக்கட்டும்.
6. சில்லறைச் சண்டையிலிருந்து விலகி இருங்கள். தீவிரமான விவாதங்களுக்குள் ஆராயாமல் கருத்துகளை அள்ளி வீச வேண்டாம்.
7. இனிமையானவர்களாக இருங்கள். நகைச்சுவை நல்லது.
8. கூடுமானால் கருத்து வேறுபாடுள்ளோரையும் ஒன்றாகக் கொண்டு வாருங்கள்.
9. வாழ்க்கை, குடும்பம், தேவாலயம் மற்றும் ஊழியத்தில் இருப்பதைவிட வித்தியாசமாக சமூக ஊடகத்தில் நடந்துகொள்ளாதிருங்கள். ஆன்லைனிலும் ஆஃப்லைனிலும் ஒரே நபராக இருங்கள்.
10. சமூக ஊடகத்தில் மட்டுமே வளையவந்து மற்ற இடங்களில் அவர்கள் யார், எப்படி என்று தெரியாதவாறு மறைந்திருக்கும் முகமற்ற நபர்களைச் சட்டை செய்யாதீர். அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது எச்சரிக்கைக்குரியது.
11. லைக், ஷேர், போஸ்ட், கமெண்ட் - இவை அனைத்திலும் கிறிஸ்துவை மையமாக நீங்கள் கொண்டிருப்பது வெளிப்பட வேண்டும்.
12. பொது இடத்தில் எப்படிப் புலம்புவதில்லையோ அதேபோல் சமூக ஊடகத்திலும்...

குருத்தோலை



# அரட்டை பாப்

ராபர்ட் க்ளமெண்ட்ஸ்

MAKE THINGS HAPPEN!

## கரம் நீட்டுங்கள் புறம்!

இன்று காலை பூங்காவில் கைவீசி நடைபயிற்சி செய்துகொண்டிருந்த போது, ஒருவர்மீது தெரியாமல் இடித்து விட்டேன். உடனே, “சாரி” (வருந்துகிறேன்) என்று சொன்னேன்.

“தேங்க் யூ” (நன்றி) என்றார் அவர்.

என் காதில் சரியாகத்தான் விழுந்ததா என்று நான் சற்று குழப்பத்திலே நடக்க ஆரம்பித்தேன். என் நடை வேகத்தைக் குறைத்து அவர் வரும்வரை காத்திருந்து அவரிடம் கேட்டேன், “ஏன் நன்றி என்று சொன்னீர்கள்?”

“ஏன்னா... இன்னைக்கு எங்கிட்ட பேசின மொத ஆள் நீங்கதான்” என்றார்.

பழைய கதை ஒன்றைக் கேட்டிருக்கிறேன். தபால் அலுவலகத்தில் வரிசையில் நின்று கொண்டிருந்த ஒரு இளைஞனுக்கும் வயது முதிர்ந்த ஒரு பெண்ணுக்குமான உரையாடல் அது. அந்தப் பாட்டியிடம் பார்சல்கள் அல்லது கடிதங்கள் என எதுவும் இல்லாததைக் கவனித்த அந்த இளைஞன், ‘ஏன் வரிசையில நிக்றீங்க?’ என்று கேட்டான். “ஸ்டாம்ப் வாங்குறதுக்குப்பா” என்றார் பாட்டி.

“பாட்டி... இவ்ளோ நேரம் நின்னு களைச்சு போயிட்டீங்க... அங்க பாருங்க... ஸ்டாம்ப் கொடுக்கிற மெஷின் இருக்குது... அதுலயே எடுத்துருக்கலாம்” என்று சுவரில் மாட்டப்பட்டிருந்த ஸ்டாம்ப் விற்பனை செய்யும் இயந்திரத்தைக் காட்டினான் இளைஞன். “ஆமா, தேங்க்ஸ்... ஆனா நா இன்னும் கொஞ்ச நேரம் இங்கயே நின்னுக்குறேன்... கவுன்டர் பக்கத்துல வந்துட்டு இல்லியா?” என்றார் பாட்டி.

“இல்ல பாட்டிம்மா... இவ்ளோ நேரம் ஏன் நீங்க கால் கடுக்க நிக்கணும்? அந்த மெஷின்லருந்து உடனே எடுத்துக்கலாம்” என்று மீண்டும் அந்த இளைஞன் சொன்னான். அந்தப் பாட்டி இளைஞனின் கையில் அன்பாகத் தட்டி, “தெரியும்ப்பா...



ஆனா, என் பேரப் பிள்ளைங்க எப்படி இருக்காங்கன்னு அந்த மெஷின் கேக்காதுப்பா!'' என்றார். ஸ்டாம்ப் வேண்டுமென்ற அவருடைய தேவையைக் காட்டிலும் பெரிய ஒரு தேவை அவருக்கு இருந்தது – மக்களுடன் தொடர்பில் இருக்க வேண்டுமென்ற உணர்வுதான் அது. அந்தத் தேவையை ஸ்டாம்ப் விற்பனை இயந்திரத்தினால் ஒருபோதும் நிறைவேற்ற முடியாது.

என்னுடைய தந்தை நியூயார்க்கில் இருந்ததபோது, அவருக்குப் புற்றுநோய் தீவிர நிலையில் இருப்பதாகக் கண்டறியப்பட்டது. இந்தியாவிற்கு வந்து தன்னுடைய கடைசி நாட்களை என்னுடன் கழிக்க வேண்டுமென அவர் விரும்பினார். இந்தியாவில் என்னுடைய வீட்டிலோ மருத்துவமனையிலோ அவரைப் பார்க்க வரும் அனைவருமே ‘‘நியூயார்க்ல நல்ல ட்ரீட்மெண்ட் கிடைக்குமே... ஏன் இங்க வந்தீங்க?'' என்று அவரைக் கேட்பார்கள். அவருடைய கட்டிலில் அருகே உட்கார்ந்து அவருடைய கையைப் பிடித்திருக்கும் அந்த நபரைப் பார்த்து, தன் கண்களில் ஒளி மின்ன அவர் சொல்லுவார், ‘‘உங்கள மாதிரி அங்க யாரும் என் கைய புடிச்சிகிட்டு என் பக்கம் உக்காந்திருக்க மாட்டாங்களே... யாரும் என்கூட நேரம் செலவழிக்க மாட்டாங்களே'' என்பார்.

நல்ல மருத்துவ உதவியைக் காட்டிலும் மேலான ஒன்று என் அப்பாவிற்குத் தேவையாக இருந்தது. அவருடைய பேரப்பிள்ளைகள் எப்படி இருக்கிறார்கள் என்று கேட்பதற்கும்,

> **“தெரியும்ப்பா... ஆனா, என் பேரப் பிள்ளைங்க எப்படி இருக்காங்கன்னு அந்த மெஷின் கேக்காதுப்பா!”**

வீட்டிற்கு வந்து அவருடன் உட்கார்ந்து நேரம் செலவழிக்கவும், அக்கறை காட்டவுமான ஆட்களே அவருடைய தேவையாக இருந்தது. அப்படிப்பட்ட ஒரு சிலரே உலகின் மிகச்சிறந்த மருத்துவ வசதிகளைக் காட்டிலும் அவருக்கு முக்கியமானவர்களாக இருந்தார்கள்.

நான் ‘‘சாரி'' கேட்ட அந்த நபர் எனக்கு முன்னதாக நடந்து கொண்டிருந்தார். அவருடன் சேர்ந்து என்னால் நடக்க முடியவில்லை. நடந்தால், என் கண்ணில் கோர்த்து நிற்கிற பெரும் கண்ணீர்த்துளியை அவர் பார்த்துவிடக்கூடும். அது வறண்டு போகும்வரை காத்திருந்து, மீண்டும் அவருடன் நடக்கத் துவங்கினேன். நான் அவருடன் நடப்பதில் அவர் மகிழ்ந்தது அவருடைய கண்களின் ஒளியாக வெளிப்பட்டது. நாங்கள் இணைந்து நடக்கும்போது, மீண்டும் புதிதாக என் கண்ணில் வெளிப்பட்ட கண்ணீர்த்துளியை அவர் பார்த்திருக்க மாட்டார் என நம்புகிறேன்.

உங்கள் கரத்தை புறம் நீட்டி தொடுவதற்கான மக்கள் உங்களைச்சுற்றி இருக்கிறார்களா?

**ஆசிரியரின் இதர படைப்புகளை ஆங்கிலத்தில் வாசிக்க https://bobsbanter.com/ என்ற இணையதளப் பக்கத்தைத் தொடரலாம். rtgclements@gmail.com என்ற மின்னஞ்சலில் தொடர்புகொண்டு வாட்சப்பில் தினமும் அவருடைய கட்டுரைகளை ஆங்கிலத்தில் பெறலாம். இக்கட்டுரையானது ஆசிரியரின் அனுமதி பெற்று, தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்படுகிறது.**



# அரசியல் பேசாமல் இருக்காதீர்!

✍ வில்பர்ட் C துரை

## அலட்சிய அரசியல்

'மறதி எனும் வியாதி' என்று சொல்வார்கள். என்னைக் கேட்டால், மறதி என்பது மாமருந்து என்றே சொல்வேன். அம்மாமருந்தினை இறைவன் இயல்பிலேயே தந்துவிட்டதன் விளைவாகத்தான் மனிதர்கள் அங்குமிங்குமாக நடமாடிக் கொண்டிருக்கிறோம். இல்லையென்றால், ஒவ்வொருவரும் ஏதோவொரு கொடுஞ் சூழலின் சுழலில் சிக்கிக்கொண்டு வெளிவர முடியாமல் முடங்கிப் போய்க்கிடந்திருப்போம். மருந்தென்றாலும் அளவு அதிகமாகிப் போய்விடும்போது வியாதியைக் கொண்டு கொண்டுவந்து விடுகிறது. மறதி எனும் இம்மாமருந்து பக்கவிளைவு அற்ற மருந்தாக இல்லை போலும்!



மறதி என்பது மக்களிடம் இருப்பதால்தான் இந்த அரசியல்வாதிகள் எல்லாரும் வெள்ளையும் சொள்ளையுமாக, பற்கள் பளிச்சென்று தெரிய, கைகளைக் கூப்பியபடி, வெள்ளை கார்களில் அணிவகுத்து, பகுமானமாய் சிரித்துக்கொண்டு, மீண்டும் வாக்கு கேட்டு நம்மைத் தேடி வர முடிகிறது. அந்தச் சிரிப்பிற்குப் பின்னால் ஒளிந்திருக்கும் மர்மங்கள் படைத்தவருக்குக்கூட தெரியுமோ என்னவோ!

இடைத்தேர்தல் என்றாலே ஆளுங்கட்சிதான் வெற்றிபெறும் என்பது பொதுவான ஒரு கருத்து. ஆளுங்கட்சிக்காரர்கள் வந்தால்தான் சிறப்பாகச் செய்வார்களாம். நல்லா செய்தாங்க போங்க! ஒவ்வொரு தேர்தலிலும் வெள்ளையப்பன்தான் சிறப்பாக வேலை செய்து வெற்றியை ஈட்டித்தந்தான், தருகிறான் என்பது தெரியத்தான் செய்யும். "ஐயகோ! மக்களை கேவலப்படுத்துகிறீர்களே, ஜனநாயகத்தைக் கேலி செய்கிறீர்களே" என்பார்கள் இப்படிச் சொன்னால். இதுதான் நிதர்சனமான உண்மை. பணமாக மாதம் ஆயிரம் ரூபாய்கூட இல்லாமல், குடும்பத்தை நடத்துவோர் பலர் இருக்கும்போது, இப்படிப்பட்ட

திருவிழாக்களின்போது ஒரே நாளில் ஆயிரங்களைப் பார்க்கும்போது மூர்ச்சித்துப் போகிறார்கள். அவர்களைச் சொல்லி குற்றமில்லை. அவர்களைப் பொறுத்தவரையில், ஐந்தாண்டுகளுக்கான நல்லதை அவர் அந்த ஒரே நாளில் செய்து விட்டதைப்போலவே உணர்ந்து, மனநிறைவாக அவருக்குத் தாங்கள் செய்ய வேண்டிய கடமையைச் சிறப்பாக ஆற்றிவிடுகிறார்கள். இப்படி எதிர்பார்க்கும் நிலையிலேயே பெரும்பான்மையோர் இருந்துவிட்டால்தான், எந்தச் சிரமமுமின்றி தாங்கள் நினைத்ததைச் சாதிக்க முடியும் என்பதால், அவர்களைச் சுயசார்புடன் நிற்கச் செய்ய எந்தத் திட்டங்களையும் இவர்கள் வகுப்பதில்லை.

மற்றொரு விஷயம், அரசு தரப்புக்கும் பொதுமக்களுக்கும் எதிலும் அலட்சியம். அலட்சியம் என்றாலே, “இதெல்லாம் ஒரு விஷயமாங்க” என்று நினைக்கிற அளவிற்கான விஷயங்களில் காட்டும் மனப்போக்கு. சமீபத்தில் தன் வீட்டு விழாவிற்கு வருகைதரும் அரசியல்வாதிகளை வரவேற்பதற்காக, அரசியல்கட்சி பிரமுகர் ஒருவர் சாலையின் நடுவில் வைத்த பேனரினால் ஏற்பட்ட உயிரிழப்பு பரபரப்பாக பேசப்பட்டது. அதைப்போன்ற நிகழ்வுகள், பல ஆங்காங்கே முன்னதாகவும் நடந்திருக்கின்றன. டிராபிக் ராமசாமி என்ற பெரியவர் ஒருவர் இதுபோன்ற பொதுமக்களுக்கு இடையூறு தரும் வகையில் பேனர்கள் அமைக்கப்படக்கூடாது என அதற்கு முன்பிருந்தே போராடிக் கொண்டிருந்தார். அதற்கு ஆதரவு தெரிவிக்காது இருந்தால்கூட பரவாயில்லை, அதை எள்ளி நகையாடியது பெருங்கூட்டம் ஒன்று. விளம்பரத்துக்காகச் செய்கிறார் என்று ஒரு கூட்டத்தினர். அதில் உண்மை இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். ஏன்? விளம்பரத்துக்காகச் செய்தால்தான் என்ன? சரியானதைத்தானே கேட்டார்?

> **“ஆமாம், யாருக்கோ நடக்கும்வரை அப்படித்தான் பேசிக் கொண்டிருப்போம், அப்படியொரு அலட்சியம் நமக்கு.”**

அன்றைக்கே ஏகோபித்த ஆதரவு இருந்திருக்குமானால், அதுபோன்ற பல உயிரிழப்புகளைத் தவிர்த்திருக்கலாமே. “என்ன சார், பேனர் வச்சது குத்தமா சார்? ஏதோ கெட்ட நேரம்... விழுந்துருச்சு...” என்று சிலர். ஆமாம், யாருக்கோ நடக்கும்வரை அப்படித்தான் பேசிக் கொண்டிருப்போம், அப்படியொரு அலட்சியம் நமக்கு. பேனர் வைக்க வேண்டாம் என்று சொல்லவில்லை, இடையூறு இல்லாமல், அனுமதி பெற்று, பாதுகாப்பாக வைக்க வேண்டுமென்பதுதானே முன்வைக்கப்படுகிறது.

அரசு இயந்திரம் வரும்பொழுது காப்போனாகவும், வந்தபின் காப்போனாகவும் இயங்குதல் கூடாது. வரும் முன் காப்போனாகச் செயல்பட வேண்டும். எந்தவித முன்திட்டமும் இன்றி, கடலில் கொட்டிய எண்ணையை வாளியைக் கொண்டு அள்ளிய ஆகச்சிறந்த



தொழில்நுட்பம் நம்முடையது. அதை நகையாடியதுடன் முடிந்துவிட்டது நம் பணி. சிரித்துவிட்டு மறந்துவிடுவார்கள் என்று கடந்துவிடுவது அரசின் மெத்தனப்போக்கு. இதற்கு முன்பு இப்படி நடந்ததே இல்லை என்று சொல்வதற்கு எதற்கு ஒரு அரசாங்கம்?

அண்மையில் நடந்த ஆழ்துளைக் கிணற்று மரணம் நாட்டையே உலுக்கியது. இணையத்தின் வெளிச்சத்தில் உலகமே வேடிக்கை பார்த்தது. சுறுசுறுப்பாகச் செயல்பட்டார்கள், தியாகத்துடன் செயல்பட்டார்கள், தந்தை உள்ளத்தோடு செயல்பட்டார்கள். ஆமாம், ஒத்துக்கொள்ள வேண்டியதுதான். கொஞ்சமும் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால், இங்கு கவனிக்க வேண்டியது, ஆழ்துளைக் கிணற்று மரணத்தில் சிறுவன் சுஜித் முதலாமவன் அல்ல. அப்படியானால், இதற்கு முன்னர் வகுக்கப்பட்ட நெறிமுறைகள் என்னவானது? அதைத்தான் அலட்சியம் என்கிறோம். பயன்பாட்டில் இல்லாத ஆழ்துளைக் கிணறுகளைக் கையாளும் நெறிமுறைகள் ஏற்கெனவே வகுக்கப்பட்டிருக்கின்றன. அதையெல்லாம் ஏன் செயல்படுத்தவில்லை என்று கேட்டால், அந்நியன் திரைப்படத்து அம்பியாகச் சித்தரித்து கேலி செய்வீர்கள். நன்றாகத்தான் இருக்கும் கேலி செய்து மீம்ஸ்கள் தெறிக்கவிடும்போது. ஆனால், அது நம் வீட்டில் நடக்காதவரைதான்.

வெள்ளை வேட்டியில் கறை பட்டுவிட்டதென்றால் தூக்கிக் கொண்டாட வேண்டுமா? ஊடகங்கள் தாம் நினைத்ததை எல்லாரையும் நம்பச் செய்துவிடுகின்றன. அதன் வலிமை அப்படி. அறிவுசார் சிந்தனைகளை ஓரங்கட்டச் செய்துவிட்டு, உணர்வுசார் பகுதிகளை நேரடியாகத் தாக்கி, காரியம் சாதித்துக் கொள்கிறார்கள். இப்போதும், தனிநபரின் பணியைக் கொச்சைப்படுத்தாமல், துறை சார்ந்தவர்கள் செய்ய வேண்டிய பணியை ஏன் சரிவர செய்யவில்லை என்பதுதான் இப்போதும் நாம் குறிப்பிடும் விஷயம்.

இப்படியாகப் பிரச்சனை வரும்போது மட்டுமே மக்கள் கொந்தளிப்பார்கள். ஆமாம், அதுதான் யதார்த்தம். ஆனால், அரசும் அப்படி இருப்பதுதான் வேதனையானது. எதிர்காலத்தில் வருவதற்குச் சாத்தியமானவை பற்றி ஆராய்ந்து, அவைகளை எதிர்கொள்ள முன்தயாரிப்புடன் இருப்பதுதான் அரசின் பணியாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட அரசு ஓரிரவில் உதயமாகி, நாடு சொர்க்கபுரியாகி விடாது நாம் தூங்கி எழும்பியிருக்கும்போது. அதற்கானப் பணி நீண்டது, அதற்காகத்தான் அரசியல் பற்றிய புரிதல் தேவை. அதனால்தான் சொல்கிறோம், அரசியல் பேசுவோம் என்று.



# நெட்டதில் சுட்டது...

**முடிவெட்டுபவர் ஒரு மந்திரியின் முடி வெட்டுகையில்..**

பார்பர் : ஸ்விஸ் பேங்கின் பிரச்சனை என்ன..!?

மந்திரி : நீ முடிவெட்றியா இல்ல என்கொயரி செய்றியா..!?

பார்பர் : நான் சும்மாதா கேட்டேன் சார்..

**மறுநாள் பார்பர் அமைச்சரவையின் மூத்த அமைச்சரின் முடிவெட்டும்போது..**

பார்பர் : சார்... கருப்புப்பணம் சம்பந்தப்பட்ட இஷ்யு என்னாச்சி..!?

மந்திரி : இதை என்ன பார்த்து ஏன் கேக்கற..!?

பார்பர் : நா சாதாரணமாத்தான் கேட்டேன்..

**மூனாவது நாள் சிபிஐ பார்பரை ஆழமாக விசாரிக்கிறது.**

சி.பி.ஐ : நீ அன்னா ஹஸாரேயின் ஏஜெண்டா..!?

பார்பர் : இல்லை சார்..

சி.பி.ஐ : நீ பாகிஸ்த்தான் ஏஜெண்டா..!?

பார்பர் : இல்லை சார்.

சிபிஐ : அப்படின்னா விஐபி முடிவெட்ட வரும்போது, ஸ்விஸ் பேங், கருப்புப்பணம் பற்றி ஏன் விசாரிக்கிறாய்..!?

பார்பர் : சார் எனக்கு ஸ்விஸ் பேங்க் பத்தியோ கருப்புப் பணம் பத்தியோ ஒன்னும் தெரியாது. ஆனா அதப் பத்தி பேசுறப்ப அவங்களோட முடி நேரா, ஸ்ட்ரைட்டா நிக்கிது. எனக்கு வெட்டுறதுக்கு ஈஸியா இருக்கறதால அதைப்பத்தி கேட்டேன்..!!

**சி.பி.ஐ மயக்கம் போட்டு விழுந்தது...!!**




**பிறப்பின் வலி**

**பிறப்பவனுக்கு அல்ல, பெறுபவளுக்குத்தான்...**

**இறப்பின் வலி**

**இறப்பவனுக்கு அல்ல, மற்றவருக்குத்தான்...**

**- GK மணி**



# நீ மனிதனா?

ஜாண்சன் துரை



கல் உடைத்து, காயம்பட்டு, அந்தக் காயம் ஆறாமல் மஞ்சள் வைத்து துணியால் கட்டு போட்டு, அடுத்த நாள் வேலைக்குச் செல்லும் என் சொந்தங்களில் நானும் ஒருவன்.

சிமெண்ட் பால் பட்டு, கைகள் பொத்து, காயம் அடைந்து, மஞ்சள்பொடி போட்டு, தீயாகக் காந்தும் நிலையிலும், மறுநாள் வறுமையின் நிமித்தமாக வேலைக்குப் போகும் சொந்தங்களில் நானும் ஒருவன்.

அந்த நாள் உடல் வலிகளை இன்றுவரை மனதில் சுமந்து... என் சொந்தங்களுக்கு விடிவுகாலம் வராதா என்று பலநாள் தூக்கம் இழந்தவர்களில் நானும் ஒருவன்.

என் சொந்தங்கள் ரத்தத்தை வியர்வையாக்கி, தினக்கூலி 200, 300 என உழைப்பவர்கள். அவர்களுக்கு என்றைக்கும் வேலையும் கிடைக்காது, பென்ஷனும் கிடைக்காது, மருத்துவ லீவும் கிடையாது.

அப்படிப்பட்டவரகளிடம் மின் விசிறி காற்றில் ஒய்யாரமாக உட்கார்ந்து, மாதம் ஐம்பதாயிரம், ஒரு இலட்சம் என சம்பளம் வாங்கும் அரசு ஊழியர்கள் கிம்பளத்துக்காகக் கையை நீட்டுவது எவ்வளவு கீழ்த்தரமானது? எவ்வளவு அநீதியானது???



லஞ்சம் வாங்கும் சுகபோகியே! எங்கள் வறுமையைக் கண்டும் உனக்கு இரக்கம் இல்லை என்றால்... நீ மனிதனே இல்லை!

உன் பொண்டாட்டி, உன் பிள்ளை சுகபோகமாக வாழ, எங்கள் வாழ்வாதாரத்தை அழித்து நீ வாழவேண்டும் என்று நினைக்கிற நீ மனிதனா????

வயிற்றுப் பசி போக்க மலம் அள்ளி, மண் சுமந்து, வாழ்க்கையைப் பல போராட்டங்களில் வலியோடு எதிர்கொண்டு, தன் பிள்ளையின் அற்ப ஆசையைப் போக்க காசு இல்லாமல் தடுமாறும் இதயத்தை மேலும் உடைக்கும் கல் நெஞ்சம் உன்னிடம் இருக்கிறதே நீ மனிதனா????

எல்லாச் சட்டங்களும் ஏழைகளான எங்களையே தண்டிக்குமாம்...

உன்னைப் போன்ற அயோக்கியர்களுக்குப் பூ மாலை போடுமாம்... இதென்ன சமூகம்?

வாழ வழியின்றி, தங்க இடமின்றி, வீதியில் படுத்து உறங்கினாலும், அங்கு வந்து லத்தி கம்பினால் அடித்து விரட்டும் காவல்துறையில் கல்மனதுடன் இருக்கும் உன்னை, ஊழல்வாதிக்கு சல்யூட் அடித்து, அடிமை போன்று நிற்கும் உன்னை, நேர்மையான அதிகாரி என்று இச்சமூகம் அழைக்கிறதென்றால் இதென்ன சமூகம்?

காலங்காலமாக அகதிபோல காலங்களிக்கும், வறுமையைச் சுமையாக சுமந்து உயிர் வாழ்வுக்காக உழைக்கும் ஏழைகளுக்கான எந்தத் திட்டமும் வைக்காத அரசாங்கம், ரத்தத்தை உறிஞ்சி வேலைவாங்கி, கொஞ் சமாகக் கூலி கொடுக்கும் முதலாளித்துவ நிறுவனங்களுக்குச் சலுகைகள் வழங்கி, அவர்களுக்காகவே நாட்டு மக்கள் உழைப்பது போன்று பொருளாதாரத் திட்டங்கள் வகுக்கும் இது ஜனநாயக நாடா?

இந்தச் சமூகமும், இந்த நாடும் செல்வந்தர்களுக்கும், கொள்ளையர்களுக்கும், ரவுடிகளுக்கும் புகழ் பேசுவது ஒழியும் நாளே என் சொந்தங்களின் விடியலாகும்.

அப்பொழுதே என் சொந்தங்களின் விடுதலை நாள் பிறக்கும்.

என் கனவு நிச்சயம் நிறைவேறும்.

சட்டங்கள் அனைவருக்காகவும் இயற்றப்படுகின்றன...

**ஆனால், எளியோரிடமே**

**சட்டம் தன் கடமையைச் செய்கிறது.**

**- ரியா**





ஜெனிஃபர் ஜூன்

# நற்பண்புகளுடன் நடந்துகொள்கிற குழந்தைகள்

## நற்பண்புகளுடன் நடந்துகொள்கிற பெற்றோர்களிடமிருந்தே உருவாகிறார்கள், நன்கு போதிக்கிற பெற்றோர்களிடமிருந்தல்ல!

உங்கள் குழந்தைகளுக்கு நல்ல பழக்கங்களைப் போதிப்பது நல்ல பெற்றோருக்கான அடையாளம்தான். ஆனால், அத்தோடு உங்கள் பணி நின்றுவிடுவதில்லை. அவர்களுக்கு நீங்கள் போதிப்பவற்றை உண்மையிலேயே செயலில் காட்டுகிறீர்களா? "குழந்தைகள் கெட்ட வார்த்தைகள் பேசுவதில்லை, தாங்கள் கேட்ட வார்த்தைகளையே பேசுகிறார்கள்" என்று ஒரு சமூக வலைதளப் பதிவில் வாசித்தேன். எவ்வளவு உண்மை இது!

நம்முடைய குழந்தைகளே நம்முடைய மகிழ்ச்சியின் பொக்கிஷங்கள். பழக்க வழக்கமோ, செயலோ, வார்த்தையோ எதுவெனினும் கற்றுக்கொள்ள அவர்கள் ஆர்வத்துடன் இருக்கிறார்கள். அவர்களுடைய மூளையானது களிமண்ணைப்போல தயாராக இருக்கிறது. சரியான விதத்தில் நாம் அவர்களை வனைய வேண்டும். ஏனென்றால், களிமண்ணானது காய்ந்து போன பிறகு கடினமாகி விடுவதைப்போலவே, பின்னர் மாற்றியமைக்கப்பட முடியாத சில குறிப்பிட்ட விஷயங்களையும் குழந்தைகள் கற்றுவிடக்கூடும். அப்படிச் செய்ய நீங்கள் முற்பட்டால், கடினமாக்கப்பட்ட களிமண்ணை நீங்கள் உடைத்துவிடக் கூடும்!

உங்கள் குழந்தைகள் முரண்டுபிடிக்கும் போது அதைக் கவனியுங்கள், அவர்களுடன் நேரம் செலவழியுங்கள், உங்கள் வேலை களை ஒதுக்கி வைத்துவிட்டு, ஒரு பெற்றோரின் கதாபாத்திரத்திற்கு வந்துவிடுங்கள். சில காரணங்களுக்காக அவர்களுக்கு நீங்கள் தேவைப்படுகிறீர்கள். அதைத்தான் அவர்கள் முரண்டுபிடிப்பினால் வெளிக்காட்டுகிறார்கள். உங்கள் குழந்தைகள் பசியுடன் இருக்கலாம், தூக்கம் வருவதுபோல் உணரலாம், உங்களின் கட்டியணைத்தல் அவர்களுக்குத் தேவைப்பட்டிருக்கலாம்; காரணம் எதுவாக இருப்பினும், அவர்களுக்கு நீங்கள் தேவைப் படும் சமயத்தில் அவர்களது பிரச்சனைகளை எதிர்கொள்ளத் தயாராக இருங்கள்.

குழந்தைகளுக்காகவும் அவர்களுடைய மகிழ்ச்சிக்காகவும்தானே நாம் வாழ்கிறோம்! இன்றும் கூட, நீங்கள் வேலையில்

சற்று அசதியாக அல்லது உடல் நிலை சரியில்லாமல் உணரும்போது உங்களது அம்மா அல்லது அப்பா அருகே இருக்க வேண்டுமென விரும்புகிறீர்கள் இல்லையா? உங்கள் பெற்றோர் இல்லாத பட்சத்தில், உங்கள் துணையாவது உங்கள் கைகளைப் பிடித்தபடி இருக்க விரும்புவீர்கள். இந்த வயதிலும்கூட இப்படிப்பட்ட அன்பின் சிறு வெளிப்பாடுகளை நாம் எதிர்பார்த்திருக்கும் போது, உங்கள் குழந்தைகள் எவ்வளவு அதிகமாக உங்கள் கவனிப்பை விரும்புவார்கள் என்று யோசிக்க முடிகிறதா?

உங்கள் குழந்தைகளிடம் நீங்கள் எதிர்பார்க்கிறவற்றை நீங்கள் முதலில் செய்யுங்கள். மிக எளியதுதான் அது. உங்கள் குழந்தைகள் 9 மணிக்கு முன்னர் காலை உணவு சாப்பிட்டிருக்க வேண்டுமென நீங்கள் விரும்பினால், நீங்களும் அப்படியே செய்திருக்க வேண்டும். நீங்கள் உங்கள் காலையுணவை சிரத்தையின்றி எடுத்து கொண்டு, சரியான நேரத்தில் சாப்பிட வேண்டுமென உங்கள் குழந்தைகளுக்குப் போதிக்கும்போது அவர்களது சிறிய மனது குழம்பிவிடும். உங்கள் குழந்தைகளுக்குக் கற்பிப்பது மிகவும் எளிது. அவர்கள் தாங்கள் பார்ப்பதையே எப்போதும் செய்கிறார்கள். உங்கள் குழந்தைகள் நற்பண்புகளுடன் நடந்துகொள்ள வேண்டுமென விரும்புகிறீர் களா, பெற்றோராக நற்பண்புகளுடன் நடந்து கொள்ளுங்கள்!

**பின்குறிப்பு: உங்கள் குழந்தை காலிஃப்ளவர் சாப்பிட வேண்டுமென நீங்கள் விரும்பினால், நீங்களும் சாப்பிட மறக்காதீர்கள். உங்களுக்கு அது பிடிக்காது என்று நீங்கள் சொல்வீர்கள் எனில், அவர்கள் சாப்பிட வேண்டுமென நீங்கள் எதிர்பார்க்க முடியாது!**




இதற்கு மாத, வருட சந்தா எதுவும் கிடையாதா அண்ணா???
புத்தகத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.. பணம் கொடுத்து வாங்க வேண்டும் என்று தோன்றுகிறது.. அருமையான, பயனுள்ள, தேவையான படைப்புகள் மற்றும் முயற்சிகள்..

– லெட்சுமனன், திருப்பூர்.

நல்ல முயற்சி சகோ. திருமறையை அடிப்படையாகக் கொண்டு, சமூக பிரச்சனைகளை அலசி ஆராய்ந்து விளக்கங்களைக் கொடுக்கும், கிறிஸ்தவரால்லாதோரும் விரும்பிப் படிக்கும், அனைத்து வயதினருக்கும் ஏற்ற ஒரு பத்திரிகையாக இருந்தால் நலமாக இருக்குமென்று அடிக்கடி நினைத்தது உண்டு.

– ஜோயல் துரை

அருமை. வாசிக்கத் தூண்டுகிறது.

– ஜோசுவா டேனியல்

சேதாரமின்றி சத்தியத்தை வழங்க
சாதாரண மனிதனின் சந்தோஷ வாழ்த்துக்கள்.

– டேவிட் தன்ராஜ்

**நீங்களும் உங்கள் மேலான கருத்துக்களை எங்களுக்குத் தெரியப்படுத்தலாம்...**

**kurutholaimag@gmail.com**

*Facebook : **@kurutholai***

*Mobile :* **9442269002**



# கல்யாணமாம் கல்யாணம்

ஜெஸ்வின்

## அழகு

எது அழகு? எது அழகு என்று நீங்கள் நம்புகிறீர்களோ அதுதான் அழகு. கொஞ்சம் நேரடியாக சொல்வதானால் எது அழகு என்று நீங்கள் நம்ப வைக்கப்பட்டிருக்கிறீர்களோஅதுதான் அழகு. நம்பினால் நம்புங்கள். அழகு ஒரு பொது உண்மை (Objective) கிடையாது. தனி நபர் பார்வைக்கு (Subjective) ஏற்ப மாறுபடுவது. இதை வாசிக்கும் நீங்கள் திருமணம் ஆகாதவராக இருக்கும் பட்சத்தில் மனதில் இலேசாக ஒரு சந்தேகம் வரலாம். எழுத்தாளர் ஒருவேளை அழகற்ற ஒருவரைத் திருமணம் செய்ய சொல்வாரோ? கற்பூரம் அடித்து சத்தியம் செய்கிறேன் அதுவல்ல என் நோக்கம்.

நீங்கள் அழகில்லை என்று கருதுகிற ஒருவரைக் கண்டிப்பாகத் திருமணம் செய்ய வேண்டாம். அதாவது, நீங்கள் பார்க்கும்போது உங்களுக்கு விருப்பத்தை ஏற்படுத்தாத ஒருவரை நீங்கள் திருமணம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், கொஞ்சம் பொறுங்கள். எது அழகு?

வாழ்க்கைத்துணையைத் தேர்ந்தெடுக்கும் முன்பு அழகைப்பற்றிய சரியான புரிதலுக்குள் வரவேண்டியது அவசியம். அழகைப்பற்றிய பார்வையில் நமது புரிதல்தான் பெரும் பங்குவகிக்கிறது. எது அழகு என்று நாம் கற்றுக்கொடுக்கப்படுகிறோமோ, அதுதான் அழகு என்று நாம் நம்ப ஆரம்பித்து, பின்பு அதுதான் அழகு என்று முடிவுக்கு வந்துவிடுகிறோம். அதன் பின்பு, எது அழகு என்று நாம் முடிவு செய்து விட்டோமோ அதற்கு முரண்படுகிற எதுவும் அழகல்ல என்று எண்ணுகிறோம். இப்படித்தான் நமது மூளைக்குள் கணக்கீடு நடக்கிறது.

இதுதான் அழகு என்று வரையறை செய்வதில் வெகுஜன ஊடகங்களின் பங்களிப்பு மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்துகிறது. நடை, உடை, பாவனை இப்படித்தான் இருக்க வேண்டும் என்று வகுப்பெடுப்பதில் சினிமா முதலிடம் வகிக்கிறது. ‘‘புள்ளிங்கோ’’களால் நிறைந்திருக்கிறது சமூக வலைதளம்.

உங்களுக்குத் தெரியுமா, ஒரு கலாச்சாரத்தில் அழகு என்று கருதப்படுவது மற்றொரு கலச்சாரத்தில் அசிங்கம் என்று கருதப்படுகிறது என்பது? ஒல்லியாக இருப்பதே அழகு என்கிற வியாதி தமிழ்நாட்டைத் தாக்கி பல வருடங்கள் ஆயிற்று. ஆனால், மத்திய தரைக்கடல் பகுதிகளில் பெண்கள் குண்டாக இருந்தால்தான் குடும்பத்துக்கு நல்லது என்கிற கருத்தாக்கம் இப்போதும் இருக்கிறது. உதடு சற்று பெரிதாக இருந்துவிட்டால் நமது கலாச்சாரத்தில் அந்த நபர் சந்திக்கும் கிண்டல் கொஞ் சமல்ல.
ஆனால் ஆப்ரிக்க நாடுகளில் பெரிய உதடுகளைப் போற்றிப்பாடும் கவிதைகள்தான் எத்தனை எத்தனை! சிவப்பாக இருந்தால்தான் அழகாம். உகாண்டாவிலும் காதல் துளிர்க்கவே செய்கிறது. நம் கவிஞர்கள் முத்துப்பல் வரிசையைப் பாடிக்கொண்டிருக்க ஜப்பானில் தெத்துப்பல்லிற்காகத் தவம் கிடக்கிறார்கள். அப்புறம் கிளி மூக்குக்கெல்லாம் அங்கே வாய்ப்பில்லை. மான் விழியாள் கிடைக்க கண் ஆப்ரேஷன்தான் செய்துகொள்ள வேண்டும்.

என்ன நம்ம ஊர மட்டும் கொற சொல்லிக்கிட்டே இருக்கீங்க? இங்கயும் விஷயம் இருக்குது. வெளிநாடுகளில் மாறுகண் இருந்தால் அறுவை சிகிட்சை







> கடவுள் 'மிகவும் நல்லது' என்று கண்டதில் ஒருசிலரை இவர்கள் நன்றாக இல்லை என்று சொல்வதற்கு நமக்குத் தனி தைரியம் வேண்டும். எது உண்மை? கடவுள் சொல்வதா, இல்லை மனிதர் சொல்வதா?

செய்து கொள்வார்கள். இங்கே மாறுகண் இருந்தால் செல்வம் வருமாமே? வழுக்கை கூட பண வழுக்கையாமே? தொப்பைக்குக் கூட பணத்தை ஈர்க்கும் சக்தி நம்மூரில் உண்டு.

நமது கலாச்சாரம் அழகைப்பற்றிய பார்வையை அடிப்படையிலிருந்து கட்டமைக்க மறந்துவிட்டு, அவசியப்படும்போது கஷ்டப்படுகிறது. ஐந்தில் வளைக்க மறந்துவிட்டு இருபத்தைந்தில் திண்டாடுகிறது. எனவேதான் சமுதாயத்தால் அழகற்றவர்கள் என கருதப்படுகிறவர்களை, எப்படியாவது தள்ளிவிட பல உபாய தந்திரங்களைக் கையாளுகிறது.

அக்கா மகள், அத்தை மகள், பத்துப் பொருத்தம், சாதகம், பாதகம், தீர்க்கதரிசனம், கனவில் காணுதல் இது எல்லாமே எப்படியாவது தள்ளிவிடும் முயற்சிதான். "ஆயிரம் பொய்யைச் சொல்லியாவது ஒரு கல்யாணத்தை முடிக்கலாம்" என்பதும் நமது பொன்மொழிதான்.

கடவுள் உலகத்தையும் அதின் உயிரினங்களையும் படைத்துவிட்டு "அது நல்லது" என்று கண்டார். முதல் ஆணையும் பெண்ணையும் உருவாக்கிவிட்டு மறுபடியும் உலகத்தைப் பார்த்தார். அது "மிகவும் நல்லது" என்று கண்டார்.

கடவுள் தான் படைத்த மனிதர்கள் ஒவ்வொருவரும் நன்றாயிருக்கிறார்கள் என்றே காண்கிறார். கடவுள் "மிகவும் நல்லது" என்று கண்டதில் ஒருசிலரை இவர்கள் நன்றாக இல்லை என்று சொல்வதற்கு நமக்குத் தனி தைரியம் வேண்டும். எது உண்மை? கடவுள் சொல்வதா, இல்லை மனிதர் சொல்வதா? கடவுள் சொல்வது உண்மை என்றால் பிரச்சனை யாரிடம்?

சிந்தனை மாற்றமே சிறந்த மாற்றம். சிந்தனை மாற்றம் வரட்டும். திருமண விழாவிற்குப் போய் வந்துவிட்டு "பொண்ணு நல்லா கலரா அழகா இருக்கா? பொண்ணு கலர் கொஞ்சம் கம்மிதான்" என்றெல்லாம் சொல்லி உங்கள் அருகில் விளையாடிக்கொண்டிருக்கும் சிறு பிள்ளைகளின் மனதில் நஞ்சை விதைக்காதிருங்கள்.

நீங்கள் திருமணம் ஆகாதவரா? உங்கள் மனதுக்கு மிகவும் பிடித்த அழகானவரையே திருமணம் செய்யுங்கள். ஆனால் அதற்கு முன் எது அழகு என்பதைக் குறித்த சரியான புரிதலுக்குள் வாருங்கள். அழகு உடலில் இல்லை.

# சென்று வா சுஜித், மீண்டும் நாம் சந்திப்போம்!

திருச்சி அருகே மூடப்படாத ஆழ்துளைக் கிணற்றில் 2019 அக்டோபர் 25 ஆம் தேதி அன்று விழுந்து, நான்கு நாட்களுக்குப் பிறகு உயிரற்ற நிலையில் மீட்கப்பட்ட சிறுவன் சுர்ஜித் வில்சனது பெற்றோர் மற்றும் சகோதரன் (4 வயது) ஆகியோருக்கு ஆழ்ந்த இரங்கல். அன்புக் குழந்தையை மீட்க எடுத்துக்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிந்துவிட்டன. புத்திக்கெட்டாத இயேசுவின் சமாதானம் இந்தக் குடும்பத்தை ஆறுதல்படுத்தட்டும் என ஜெபிக்கிறோம். வேதத்தின்படி, எந்தக் குழந்தையும், அவர்களது பெற்றோர்கள் எம்மதத்தைச் சார்ந்தவராயினும், விவரம் தெரியாத வயதிற்கு முன்னர் மரிக்கும் நிலையில், பரலோகத்தில் சேர்த்துக்கொள்ளப்படும் (மத்தேயு 19:4; 1 கொரிந்தியர் 7:14).

குழியை மூடாதிருப்பது, மொட்டைமாடியில் தடுப்புச்சுவர் கட்டாதிருப்பது ஆகியன ஆண்டவரின் பார்வையில் குற்றமாகும். இந்த நிகழ்வானது இந்தியாவில் 14ஆவது நிகழ்வாகும். கி.மு. 1406களில், அதாவது 3425ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட வேதாகமத்தின் 66 புத்தகங்களுள் இரு பழம் புத்தகங்களில், பின்வரும் ஆண்டவரின் கட்டளைகள் குறிக்கப்பட்டிருக்கின்றன.

**ஒருவன் ஒரு குழியைத் திறந்து வைத்ததினாலாவது, ஒரு குழியை வெட்டி அதை மூடாதேபோனதினாலாவது, அதிலே ஒரு மாடாவது ஒரு கழுதையாவது விழுந்தால், குழிக்கு உடையவன் அதற்கு ஈடாகப் பணத்தை மிருகத்தின் எஜமானுக்குக் கொடுக்கக்கடவன்.**
**- யாத்திராகமம் 21:33, 34**

**நீ புதுவீட்டைக் கட்டினால், ஒருவன் உன் மெத்தையிலிருந்து விழுகிறதினாலே, நீ இரத்தப்பழியை உன் வீட்டின்மேல் சுமத்திக்கொள்ளாதபடிக்கு, அதற்குக் கைப்பிடிசுவரைக் கட்டவேண்டும்.**
**- உபாகமம் 22:8**

இந்தச் செய்தியை வாசிக்கும் அனைவரையும் அழிவில்லாத உண்மைகளையும், தனிநபர், குடும்பம் மற்றும் தேசத்தை ஆள்வதற்கான மாற்றவியலாத கோட்பாடுகளையும் கொண்டிருக்கிற ஆண்டவரின் வார்த்தையான வேதாமத்திற்குத் திரும்ப அழைக்கிறேன்.

கிறிஸ்தவர் கிறிஸ்தவரல்லாதோர், சிறியோர் பெரியோர் என அனைவருமாக கோவில்கள், ஆலயங்கள், மசூதிகள் எல்லாவற்றிலும் நடக்கவிருந்த நிகழ்வுகளையும், விழாக்களையும் தள்ளிவைத்து, குழந்தை பத்திரமாக மீட்கப்பட வேண்டுமென ஊக்கமாக பிரார்த்தித்தார்கள். எல்லாரையும் திகைக்கச் செய்யும் கேள்வி, "கடவுள் ஏன் நம்முடைய பிரார்த்தனையைக் கேட்கவில்லை?" என்பதுதான். தன்னுடைய குழந்தைகள், கால்நடைகள், வேலைக்காரர்கள், உடல்நலம் என அனைத்தையும் இழந்துவிட்டிருந்தபோது யோபு சொன்னதைக் குறிப்பிடுவதைத் தவிர, என்னிடம் வேறு பதில் இல்லை. "அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்" (யோபு 13:15, வேதாகமம்).

ஜெபங்களுக்குப் பதில் கிடைத்தால்தான் ஆண்டவர் இருக்கிறார் என்று நிரூபிக்க முடியும் என்று கட்டாயம் இல்லை!

**- R. ஸ்டான்லி (73)**
**வேதாகமப் போதகராக மாறிய கட்டிடப் பொறியாளர்**
**தமிழ்நாடு, இந்தியா**

அத்தியாயம் 8




"என்ன யோசனை? உன்னால போக முடியாது. திரும்பப் போறதுக்கு உனக்கு கண்டிப்பா வழி தெரியாது. அது ரொம்ப ஆபத்தும் கூட. எங்கூட வா. நான் உன்ன பத்திரமா பாத்துக்குவேன்". அவன் முகத்தில் இருந்த எதிர்ப்பு என்பது ஒரு அக்கறையாக மாறியது. ஆனால், அவன் கண்களில் எதிரொளித்த சிவப்பு ஒளி அதற்கு எதிராகத் தெரிந்தது.

"எப்படித் திரும்பிப் போகணும்னு எனக்குத் தெரியாது. ஆனா நான் போவணும் அவ்வளவுதான். நா முயற்சி பண்ணிப் பாப்பேன். மன்னிச்சுக்கோங்க. உங்க நேரத்த நான் வீணடிக்க விரும்பல." நான் ஏன் இத்தனை மரியாதையாகப் பேசினேன்? மன்னிப்புக் கேட்கும் மனம் எனக்கு இல்லை. எனக்குச் சிரமமாக இருந்தது. இந்த அன்னியன் என்னைப் பற்றி என்ன நினைத்தால் எனக்கு என்ன? என்றுதான் நான் நினைத்துக் கொண்டிருந்தேன். அவன் சிறிது ஒதுங்கினால் நான் போகலாம். அதைத்தான் விரும்பினேன். சுவர்கள் நெருக்கமாக இருந்தன. எனக்கு மூச்சுத் திணறுவதுபோல இருந்தது.

எனது காயப்படாத தோளில் அவன் தன் கையை வைத்தான். "நாம கிட்டத்தட்ட போக வேண்டிய இடத்துக்குப் பக்கத்துல வந்துட்டோம். இன்னும் கொஞ்சத் தூரம்தான். உனக்கு குளிர் அடிக்குது, களைப்பா இருக்குது, குழப்பமா இருக்குது. இதெல்லாம் எனக்குப் புரியுது. அப்புறமா ஒருத்தன் வந்து என் பின்னால வான்னு சொல்றான். நான் நீயா இருந்தாக்கூட நம்பியிருக்க மாட்டேன்தான். ஆனா நம்பு, நான் உண்மையிலேயே உனக்கு உதவி செய்யத்தான் முயற்சி செய்துகிட்டு இருக்கேன்." அவன் இப்போது எனக்கு

நெருக்கமாக வந்திருந்தான். அவனது மூச்சுக்காற்றின் வெப்பத்தைக்கூட என்னால் உணர முடிந்தது. அவனது மென்மையான ஏற்ற இறக்கம் இல்லாத குரல் எனக்குச் சிறிது அமைதியைத் தருவதுபோல இருந்தது. அவனது நெருக்கம் என் இதயத்துடிப்பில் ஒன்று தாண்டிப் போவதைப்போலச் செய்தது. “நீ என்ன நம்பலாம். நான் உனக்குக் கெடுதி செய்ய மாட்டேன்.”

என் கத்தியைப் பிடித்திருந்த கத்தி இப்போது தளர்ந்திருந்தது. “நீ எனக்குக் கெடுதி செய்ய மாட்டேன்னு எனக்குத் தெரியும். நான் உன்ன நம்புறேன். நான்...வந்து...” என் வயிற்றுக்குள் ஏற்பட்ட அந்தப் பட்டாம்பூச்சி சிறகடிப்பு போன்ற அனுபவத்தை இப்போது நான் அலட்சியப்படுத்தினேன்.

“அப்படின்னா இன்னும் கொஞ்ச தூரம் போற வரைக்கும் என்ன நம்பி வா. இன்னும் பத்து பதினஞ்சு அடி எடுத்து வச்சா குகை வந்திரும். அப்புறம் நீ குளிர் காயலாம். நாம பேசலாம்.” அவன் என்னையும் தாண்டி ஊடுருவிப் பார்த்தான். ஏற்கனவே போகும் இடத்தைப் பார்த்துவிட்டதுபோல என்னை நோக்கித் தன் தலையை ஆட்டி சைகை செய்தான். எனக்கோ இருட்டுதான் தெரிந்தது. இப்போது நான் என் கையை என் பைக்குள் இருந்து வெளியே எடுத்தேன். எனக்கு இருந்த ஒரே பாதுகாப்பையும் கைவிட்டுவிட்டேன்.

“நிஜமாவா?” பட்டாம்பூச்சிகள் இப்போது அட்டகாசம் செய்து கொண்டிருந்தன.

“ஆமா, நிஜமா” அவன் உறுதியாகச் சொன்னான்.

என் படபடப்பை ஒதுக்கி வைத்துவிட்டு நான் கீழே இறங்கத் துவங்கினேன். உண்மையிலேயே சில அடிகள்தான் எடுத்து வைக்க வேண்டியிருந்தது. இவ்வளவு வந்த நான் இந்தக் கடைசி அடிகளையும் பேசாமல் தாண்டியிருக்கலாம்தான்.

அவன் உண்மையைத்தான் சொல்லியிருக்கிறான். இன்னும் சில



நொடிகள்தான். இப்போது படிகள் ஒரு சமதளமான பாறையினாலான தரையாக மாறியிருந்தன. இருளில் கண்ணுக்குத் தெரியாத இடத்தில் இருந்து நீர்ச் சொட்டுகள் விழுந்து கொண்டிருந்தன. பின்னணியில் சிறிது தூரத்தில் அருவியா, நீராவியா என்று சொல்ல முடியாத அளவு ஒரு திரைபோலத் தெரிந்தது. நீர் விழும் சத்தம் தெளிவாகக் கேட்டது. அவன் கொடுத்திருந்த ஆடையையும் தாண்டி எனக்குள் குளிர் துளைத்தது. சுற்றியிருந்த காற்றுதான் குளிரைக் கொண்டு வந்து கொண்டிருந்தது. இங்கே வந்தால் குளிர்காயலாம் என்றுதானே சொன்னான். ஆனால் அந்தத் தீப்பந்தத்தின் வெளிச்சம் மட்டும்தான் மங்கலாகத் தெரிந்தது என் கண்களுக்கு. எதிரே இருந்த என்னவென்றே தெரியாத இருள்தான் கண்களுக்குத் தெரிந்தது. வேறு எதுவும் இருப்பதற்கான அறிகுறியே இல்லை.

“இது என்ன இடம்?” ஆச்சரியத்துடன் முணுமுணுவென்ற குரலில் கேட்டேன் நான். அந்த முணுமுணுப்பு அந்த அறை போன்ற அமைப்பில் எதிரொலித்து என் காதிலேயே திரும்பி வந்து ஒலித்தது.



“இங்க வா” அவனது உரத்த குரல் ஒலித்தாலும் அவன் கையிலிருந்த பந்தம் அவனுடன் நகர்ந்ததால் நான் இருளால் போர்த்தப்பட்டு நின்று கொண்டிருந்தேன். போதும், இதற்கு மேலும் அவனைப் பின் தொடர என்னால் முடியாது. என் சிந்தனைக்குப் பதில் தருவதுபோல அவன் சத்தமாகப் பேசினான்.

“நாம வர வேண்டிய இடம் இதுதான்” அவன் தன் தீப்பந்தத்தைக் கீழே தரையில் இருந்த ஒரு குழிக்குள் காட்டினான். அந்தப் பந்தம் நூறுமடங்கு அதிக வெளிச்சத்தைக் கொடுத்ததுபோல இருந்தது. நான் என் கைகளால் முகத்தை மூடிக் கொண்டேன். பின்னர் மெதுவாகக் கைகளை விலக்கிப் பார்த்தேன். கால்பந்துகள் அளவில் பல கற்கள் பாத்திபோல இருக்க, நடுவில் இருந்த ஏதோ ஒன்றில் அவன் தன் கையிலிருந்த தீப்பந்தத்தின் நெருப்பை வைக்க, அது பற்றி எரியத் துவங்கி யிருந்தது. என்னதான் பெரிய நெருப்பு உருவாகியிருந்தாலும், சுற்றி இருக்கும் இருள் விலகவும் இல்லை, சுற்றி இருக்கும் இடமும், மேலே இருக்கும் கூரையும் எப்படி இருக்கிறது என்று என் கண்களுக்குத் தெரியவும் இல்லை. வெளிச்சத்தின் விளிம்பைத் தாண்டி இருள்தான் நிறைந்திருந்தது. வெளிச்சத்தின் உதவியால் என் கண்கள் சுற்றிலும் இருப்பவற்றை அடையாளம் கண்டு கொண்டிருந்தன. கடப்பாறைகள், பாறையை வெட்டும் கைப்பிடியுள்ள கருவிகள், தலையைப் பாதுகாக்கும் கடினமான தொப்பிகள் போன்ற சில கருவிகள் தெரிந்தவைகளாக இருந்தன. ஆனால் எதிர்காலத்தில் பாறையைத் துளை போடும் கருவி இருந்தால் எப்படி இருக்குமோ அதுபோல ஒரு கூம்பு முனையுள்ள பெரிய கருவி ஒன்று இருந்தது. அவைகள் எல்லாம் ஒரு மூலையில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. இந்த பகுதி ஏதோ ஒருவித மர்மமாக, பயப்படுத்துவதாக இருந்தது. இதில் போய் பத்திரமாக ஒளிந்திருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறான் காவலன்.

அந்தக் கற்கள் கரையைப்போல நெருப்பைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தன. தீப்பந்தத்தின் தீவிரம் அந்த நெருப்புக் குவியலில் தெரிந்தது. நான் இதுவரை இந்த அளவுக்கு சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள் நிறங்களில் இத்தனைத் தெளிவாகத் தீயைப் பார்த்ததில்லை. அவன் அங்கே இருந்த மரத்துண்டுகளில் ஒன்றின்மேல் உட்கார்ந்து தன் கைகளைத் தீயில் காட்டி குளிர் காய்ந்து கொண்டிருந்தான். சுமார் இருபது மரத்துண்டுகள் இருந்தன. இந்த இடம் அதிகமான நபர்கள் அமர்ந்திருப்பதற்காக வடிவமைக்கப்பட்டதுபோலத் தோன்றியது. அந்த நபர்கள் யாராக இருப்பார்கள் என்று நான் சிந்திக்கத் துவங்கியிருந்தேன். தான் இருக்கும் பக்கமாக வரும்படி கையை அசைத்துக் கூப்பிட்டான் அவன். நான் இருந்த இடத்திலேயே, இருளும் ஒளியும் சந்திக்கும் இடத்திலே இருந்துவிட்டேன்.

நிலவொளிக்கும் புதுத் தென்றலுக்கும் நடத்திச் செல்லும் அந்தச் சுரங்கத்தைப் பற்றி யோசித்தேன். இப்போது என் வழியை மறைத்துக் கொண்டு எதுவும் இல்லை. ஆனால் இந்த இருளின் பனிக்குள் நான் என் வழியைக் கண்டுபிடித்துப் போய்விட முடியுமா? அவன் பொறுமையான ஒரு புன்னகையை என்னை நோக்கி வீசினான். தன் கையை சூடாக்கிக் கொள்ளத் திரும்பினான். இங்கே தங்கினால் என்ன தீங்கு வந்துவிடும்? பதில்களுக்காகக் காத்திருந்தே என் வாழ்க்கையின் இத்தனை காலமும் ஓடிவிட்டது. கேள்விகள் இல்லாமல் போனால் எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும். அவனுக்கு வலப்புறமாக இருந்த அந்த மரக்கட்டை இருக்கையைத் தட்டிக் காட்டினான். எனக்கு வேண்டிய பதில்களைக் கேட்டுப் பெற்றுக் கொண்டு என் வழியே நான் போய்விடுவேன். திரும்பிப் போவதற்கு முன் சிறிது குளிர் காய்ந்து கொள்வது நல்லதுதான் என்று நினைத்துக் கொண்டேன். நான் தயக்கத்துடன் அவன் காட்டிய இருக்கையில் உட்கார்ந்தேன்.

“என் பேரு ஏட்ரியன்.” என் கைகளைக் குலுக்கினான். அவனது வெதுவெதுப்பான கைகள் என் குளிர்ந்து போயிருந்த விரல்களைப் பற்றின.

“என் பேரு அனா.” நாங்கள் ஏதோ சாதாரணமான சூழலில் இருப்பதுபோல கை குலுக்கி ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்து கொண்டோம்.

“அனா நீ போட்டுருக்கிற நெக்லஸ் ரொம்ப அழகா இருக்கு.” அதைத் தன் கைகளில் எடுத்துப் பார்த்தபடியே, “எங்கே இருந்து இது கிடைச்சுது?” என்று கேட்டான்.

“கண்டிப்பா இந்தப் பக்கத்துல இருந்து கிடைக்கல. அது மட்டும் நிஜம்.” என் பதிலைக் கேட்டு அவன் தன் புருவத்தை உயர்த்தினான். “இந்தப் பக்கம்னு சொன்னதும்தான் நினைவுக்கு வருது. இந்த இடம் எந்த இடம்னு சொல்றீங்களா?”

“இப்போதைக்கு, நாம் இருக்கறது தரைக்குக் கீழே இருக்கற சுரங்கம். இது மாதிரி நிறைய சுரங்கங்கள் இருக்குது. தற்செயலாத்தான் இத நான் கண்டுபிடிச்சேன். என்னோட ரோந்து வேலையில ரொம்ப குளிரா இருந்தா குளிர் காய்ஞ்சுட்டுப் போறதுக்காக இந்த இடத்த வச்சிருக்கேன். ஏதோ ஒண்ணு இந்த இடம்தான் என்னோட வீடு அப்படிங்கற மாதிரி ஒரு உணர்வ எனக்குக் குடுக்குது.” அவன் சிறிது அமைதியாக இருந்தான். பின்னர் தான் கண்டுபிடித்திருந்த உண்மையை என்னிடம் சொன்னான், “இது எல்லாத் திசையிலேயும் போகுது. மைல் கணக்குல நீளம் இருக்கும். அப்புறமா இன்னும் பெரிய சுரங்கங்களையும் நான் கண்டுபிடிச்சேன். யாருட்ட கேட்டாலும் எனக்குத் தெரியாதுன்னுதான் சொல்றாங்க.”

“இதப் பாத்தா ஏதோ தோண்டி எடுத்துட்டு அப்படியே கைவிட்டுட்டுப் போன சுரங்கம் மாதிரி தெரியுது. இங்க இருந்த என்னத்த தோண்டி எடுத்திருப்பாங்க?”

“எனக்கும் தெரியல. நான் விசாரிச்சுப் பாத்தவங்களுக்கும் தெரியல.”



மரக்கட்டைகள் நெருப்பில் சட சடக்கும் சத்தம், பின்னணியில் விழுந்து கொண்டிருந்த தண்ணீரின் ஒலி இவைகள் எல்லாம் எனக்குள் ஒருவித அமைதியைக் கொண்டு வந்திருந்தன. நான் என் கால்களை அந்தக் கல் வரப்புவரை நீட்டி வைத்திருந்தேன். என் கால்களுக்கு இப்போது நல்ல வெதுவெதுப்பு கிடைத்துக் கொண்டிருந்தது. என் கால்களில் நான் அணிந்திருந்த செருப்புகள் அழுகுக்காக வாங்கப்பட்டவை, அவை கதகதப்புக்கானவை அல்ல. அதிகக் களைப்பாக இருந்தேன். குளிரும் சேர்ந்து கொண்டது. அதனால்தான் சண்டை போடு அல்லது ஓடிப் போ என்ற என்ற உணர்ச்சி வந்து வந்து போய்க் கொண்டிருக்கிறது போலும். இப்போது என் நிலைமை நன்றாக இருந்தது. சிறிது ஓய்வு கிடைத்திருக்கிறது, குளிரும் என் அருகிலிருந்து விலகிப் போயிருக்கிறது.

ஏட்ரியன் என்னை நோக்கித் திரும்பினான். அவனது இடுப்புப் பட்டையில் இருந்து ஒரு பையைக் கழற்றி எடுத்துக் கொண்டே, "இப்போ உன்னோட தோள்ல என்ன ஆச்சுன்னு பாப்போம். நான் உனக்கு உதவி செய்ய முடியும்" என்றான்.

அவன் என் போர்த்தி விட்டிருந்த அவனுடைய மேல் சட்டையை விலக்கி என் தோளைப் பார்த்தான். நான் வாயில் துணியை வைத்துக் கடித்துப் பிடித்துக் கொண்டிருக்க அவன் ஒரு ஊசியை வைத்து என் காயத்தைத் தைப்பது போன்ற ஒரு காட்சி என் மனதில் ஓடியது. எத்தனை ஹாலிவுட் படங்களில் இதைப்போல காட்சிகளைப் பார்த்திருக்கிறேன்?

"நீங்க பயப்படுற அளவுக்கு மோசமா இருக்காது. நிஜம்மா. இந்தக் காயம் ஒண்ணும் ஆழமாப் போகல. நான் வீட்டுக்குப் போய் பாத்துக்கிறேன்."

அந்தக் காயத்தின் தீவிரத்தைப் பற்றி எனக்குத் தெரியவே இல்லை. ஏனென்றால் அந்த நெருப்புச் சுடரின் மாயக் கவர்ச்சியிலிருந்து என் கண்ணை விடுவிக்காமலேயே இருந்து கொண்டிருந்தேன். வலியை உணர்வது நன்றாக இருக்காது. அது எந்த வகையில் உதவி செய்யவும் போவதில்லை. அவன் என் வார்த்தைகளைப் பொருட்படுத்தாமல் என் தோளில் இருந்த காயத்தை ஆராய்ந்து பார்த்தான். கிழிந்திருந்த பகுதியைத் தன் இரு கைகளாலும் பிடித்துக் கொண்டு, அந்த இடத்தில் சிறிது அதிகமாகக் கிழித்துவிட்டான்.

காய்ந்திருந்த இரத்தம் சட்டையுடன் ஒட்டிக் கொண்டு வர என் காயம் அதிகம் வலித்தது. "என்ன பண்றீங்க?" எனது எதிர்ப்பின் குரல் அந்தக் குகைக்குள்ளேயே கரைந்து போனது.

என் காயத்தின்மேல்தான் அவன் கண்கள் கூர்மையாகப் பதிந்திருந்தன. மென்மையாகப் பதில் சொன்னான், "இது கிழிஞ்சிருக்கு, ரத்தம் ஊறிப் போயிருக்கு. இத வேணும்னா ஞாபகத்துக்கு வச்சிக்கிறியா?"

அவன் புன்னகைப்பதை என்னால் பார்க்க முடியவில்லை. ஆனால் அவன் அதைத்தான் செய்திருப்பான் என்று எனக்குத் தெரியும்.

"ம்... இல்ல... ஆனா இத சட்டுனு எடுக்கறதுக்கு முன்னால எங்கிட்ட சொல்லியிருக்கலாம். அல்லது எச்சரிக்கையாவது பண்ணியிருக்கலாம்." எனக்கே நான்





பேசியது நன்றியில்லாத பேச்சாகத் தோன்றியது. எனக்கு இருக்கும் ஒரே உதவியை நான் இனி வேறு கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன். "மன்னிச்சுக்கோங்க. இன்னிக்கு நாள் முழுசுமே எனக்கு ரொம்ப மோசமாத்தான் இருந்தது. நான் கொஞ்சம் டென்ஷனாத்தான் இருந்தேன். இன்னிக்கு நாளே ஒரு புராணம் மாதிரிதான் இருந்தது."

இப்போது மீண்டும் அவன் என்னை அலட்சியம் செய்தான். தன் வேலையைத் தொடர்ந்தான். காயத்தின் விளிம்புகளைத் தொட்டுப் பார்த்தான். காயம் எந்த அளவுக்கு மோசமாக இருக்கிறது என்று பார்ப்பதற்காக இருக்கலாம்.

"இதுக்கு உதவி செய்றமாதிரி எங்கிட்ட ஒண்ணு இருக்கு" என்று சொன்னபடியே அவன் இடுப்பில் இருந்து ஒரு சுருக்குப் பை ஒன்றை எடுத்து அதன் கயிற்றை அவிழ்த்தான்.

"அது ஆஸ்ப்ரின் மாத்திரையா? ஒண்ணு விழுங்குனா நல்லாத்தான் இருக்கும்." நான் கிண்டலாகத்தான் சொன்னேன்.

"என்னது?" புரியாமல் என்னிடம் கேட்டான் அவன்.

"ஒண்ணுமில்ல". எனது தனி ஜோக்கை நினைத்து நானே புன்முறுவல் செய்து கொண்டேன்.

அவன் பையிலிருந்து ஒரு வித்தியாச மான மணமுள்ள நீல நிறப் பொடி ஒன்றை காயத்தின் மேல் பூசினான். "இது கொஞ்சம் வலிக்கும்." நான் மனதை மாற்றி வேண்டாம் என்று சொல்ல நேரம் கிடைக்கவில்லை.

என்னை நானே இறுக்கமாகப் பிடித்துக் கொண்டேன். என் உதட்டைப் பற்களால் கவ்விக் கொண்டேன். எந்தச் சத்தமும் முனகலும் வரக்கூடாது என்று முடிவு செய்து கொண்டேன். அந்த வலி இதுவரை நான் அனுபவித்த எந்த வலியையும் விட மேலானதாக இருந்தது. தோளிலிருந்து கை வழியாக விரல்களின் நுனிவரை அந்த வலி பரவியது. இந்தப் பக்கமாக என் நெஞ்சுப் பகுதியிலும் அந்த வலி பரவியது. இதற்கு மேல் என்னால் பொறுக்க முடியாது என்ற நிலை வந்தது.

"ஆ... என்ன பண்ணுனீங்க? நெருப்பு மாதிரி வலிக்குதே!" என் தைரியமான நடிப்பை ஓரம் கட்டிவிட்டு அலறினேன். வலிக்கும் தோளை அடுத்த கையால் இறுக்கமாகப் பிடித்துக் கொண்டிருந்தேன்.

"ஒரு நிமிஷந்தான். தாங்கிக்கோங்க. அமைதியா இருங்க. மருந்து நல்லா வேல செய்ய விடுங்க. மெதுவா மூச்சு விடுங்க. சரியாயிரும்."

அவன் பேசி முடிப்பதற்கு முன்பாகவே, வலி குறையத் துவங்கியது. பின் ஒரு கூச்சம்போல இருந்தது. பின்னர் எல்லாமே சரியாகி முன்புபோல ஆகிவிட்டது. அடுத்த கையால் காயம் இருந்த இடத்தில் தடவிப் பார்த்தேன். வலி இல்லை.

"இது உண்மையிலேயே அதிசயம்தான்." வலி என் தோளைத் துளைத்துக் கொண்டு வெளியே போய்விட்டதுபோலத் தோன்றியது. "நீங்க எப்படி செஞ்சீங்க?"



நான் என் கிழிந்த தோள்பட்டைத் துணியை இழுத்துவிட்டேன். காயம் இருந்த இடத்தில் சாதாரணமாக எல்லா இடத்திலும் இருப்பதுபோல தோல் இருந்தது. சில நிமிடங்களுக்கு முன் காயமாக இரத்தம் உறைந்து போயிருந்த இடம் இப்போது அடையாளமே தெரியாமல் மாறியிருந்தது. ஒரு சிவப்புக் கோடு மட்டும்தான் அந்த நிகழ்ச்சியை நினைவுபடுத்தும் அடையாளமாக இருந்தது. வலி போனது மட்டுமல்ல, என் தோளில் இருந்த புண்ணும் ஆறிவிட்டது. எனது விரிந்த கண்களும் திறந்த வாயும் அவன் வாயில் புன்னகையை வரவழைத்தன.

அவன் தன் இடது கையை உயர்த்திக் காட்டினான். அவனது இடது புறங்கையில் என் தோளில் இருந்ததுபோல சிறிது புடைத்துக் கொண்டு ஒரு வெளிர் சிவப்புக் கோடு தெரிந்தது. ‘‘நீங்களும் உங்களுக்கு இதே மருந்து போட்டிருக்கீங்கபோல.’’

‘‘காட்டுக்குள்ள காவல் இருந்தா இது மாதிரி நிறைய காயம் வரும்.’’ அவன் தன் தலைப்பை மாற்றிப் பேசத் துவங்கினான், ‘‘எங்க மக்களுக்கு சுகமாக்கறதுக்கு நிறைய வழிகள் தெரியும். நான் வச்சிருக்கிற இந்த தூள்ல சில செடிகளும், பூக்களும் கலந்திருக்கு. தண்ணில கலக்கி குடிச்சா உடம்புக்கு உள்ள இருக்கற புண்ணும் சுகமாகும்.’’

இப்போது ஒரு குச்சியை எடுத்து நெருப்பைக் கிண்டி விட்டான். அவனுக்கு அலட்சியமாகத் தெரிந்த அவனது அறிவு எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

‘‘எங்க மக்கள்னா? உங்க மக்கள் யாரு?’’ இப்போது எனக்குப் பதில்கள் கிடைக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. இனிமேல் கவனம் சிதறாமல் பதிலை வாங்குவதில் மும்முரமாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டேன். இயற்கை வைத்தியமோ இயற்கைக்கு மேலான வைத்தியமோ, என் கவனத்தை இனியும் சிதறடிக்க முடியாது. ‘‘நான் இப்போ எங்கே இருக்கிறேன்னு எனக்குத் தெரியணும்.’’

அவன் முகத்தைப் பார்த்துத் திரும்பி உட்கார்ந்தேன். ஒரு வார்த்தையைக்கூட நான் தவற விட்டுவிடக் கூடாது. நேருக்கு நேராக இருந்தால்தான் நான் நினைத்தது நடக்கும். சிவந்த நெருப்பின் நிறமானது அவன் தலைமுடிகளுக்குள் ஒரு வித நிழலையும் வெளிச்சத்தையும் மாற்றி மாற்றிக் காட்டின. என்ன சொல்வது என்று யோசித்துக் கொண்டே அவன் நெருப்பைத் தூண்டும் குச்சியை வைத்து விளையாடிக் கொண்டிருந்தான். நெருப்பைப் பார்த்து இருந்த என் விலாப்பகுதி கதகதப்பாகவும், அடுத்த பக்கம் சில்லிட்டுப் போயும் இருந்தன.

“போஸ்டர்னிஸ் உலகத்துல யோடம் நகரத்தோட விளிம்புல நிக்கிற நீ. நான் பக்கத்துலதான் காவல் காத்துக்கிட்டு இருந்தேன். இன்னிக்கு காலைலியே மணிகளோட சத்தம் கேட்டது. ஆனா யாரும் வரல. அதனால நான் இங்கேயே காத்துக்கிட்டு இருந்தேன். ராத்திரி திரும்பவும் மணிகள் சத்தம் போட்டதுனால நான் இங்க வந்தேன். அப்போதான் நீ ஓடி வந்த.” அவன் கண்களில் விளையாட்டுத் தனமான ஒரு கிண்டல் தெரிந்தது. “எனக்குத் தெரிஞ்சு என் வாழ்நாள்ல இந்த வாசல யாரும் பயன்படுத்தி எங்க உலகத்துக்கு உள்ள வந்தது இல்ல. கிட்டத்தட்ட பத்தொம்பது வருஷமா இந்த வாசல் பத்தி வரலாறு இல்ல. இதுவரைக்கும் என்னோட வேலை ரொம்ப தனிமையா, சலிப்பாத்தான் இருக்கும். இப்போ நீ வந்ததும் ரொம்ப சுவராசியமாயிட்டுது. சொல்லு, நீ எப்படி இந்த வாசலத் திறந்த?” ஏட்ரியன் இப்போது தன் கையிலிருந்த குச்சியைத் தீக்குள் போட்டுவிட்டான். தன் முழங்கையைத் தன் முட்டியில் வைத்தபடி நான் சொல்வதைக் கூர்ந்து கேட்பதற்காக ஆயத்தமானான்.

“இன்னிக்கு நடந்தது எல்லாமே பைத்தியக்காரத்தனமானது அப்படின்னுதான் சொல்லணும். நான் நேரிலேயே இதையெல்லாம் அனுபவிக்கலன்னா, சுத்தமா இத நம்பியிருக்கவே மாட்டேன். யாரும் சொன்னாங்கன்னா அவங்களப் பைத்தியம்னுதான் சொல்லியிருப்பேன். நீங்க சொன்னதையும் கேட்டிருந்தா நீங்க என்ன பைத்தியமா?ன்னு கேட்டிருப்பேன். என்னோட பகுத்தறிவுக்கு ஒத்து வராத நிறைய நிகழ்ச்சிகள நான் நேரிலேயே இன்னிக்குப் பாத்துட்டேன். இன்னிக்குக் காலைல ஒரு பைத்தியம் பிடிக்கற மாதிரி கனவு கண்டேன். அதுவரைக்கும் நான் வாசலோ ஜன்னலோ எதையும் திறந்து விடல. நீங்க என்ன சொல்றீங்கன்னும் எனக்குப் புரியல. நான் என்னோட வேலையைப் பாத்துக்கிட்டு ஜாலியா விளையாடிக்கிட்டு இருந்தேன். என் கட்டில்ல இருந்து உரிஞ்சி இங்கே துப்பிட்ட மாதிரி இருக்குது. வாசல்னா என்ன? அது ஏன் என்னிய இங்கே கொண்டுட்டு வரணும்?”

அவனை நன்றாகக் கவனிப்பதற்காக ஒரு சிறு இடைவெளியே விட்டேன். இப்போதுதான் அவன் முகத்தில் மிகச் சிறிய முடிகள் துளிர்த்திருப்பதைக் கவனித்தேன். அவனும் என்னைக் கவனித்துக் கொண்டுதான் இருந்திருப்பானோ? எனது அரைகுறையான விளக்கம் போதாது என்று தெரிந்ததால் ஒரு தர்மசங்கடமான நிலை அப்போது உருவானது. தனக்கு பத்தொன்பது வயதாவதாகச் சொன்னான். வயதுக்கு மீறிய அறிவு இருந்தது என்று நினைத்தேன்.

“வாசல் எல்லா உலகங்களையும் ஒண்ணா இணைக்கக் கூடியது. அந்த வாசல்கள் எல்லாம் இங்கேதான் ஒண்ணா சேருது. போஸ்டர்னிஸ் தான் எல்லா உலகங்களுக்கும் நடுவுல இருக்குது. மத்த எல்லா உலகங்களுக்கும் வாசல் இந்த நாடுதான். இந்த வாசல் வழியா ஒரு பயணி







வந்தா நீ வந்த இதே காட்டுக்குள்ளதான் வருவாங்க. யாராச்சும் வந்தாங்கன்னா அந்த மணிகள்தான் சத்தம் குடுத்து எங்கள எச்சரிக்கை செய்யும். என்னோட வேலை முன் ஜாக்கிரதையா இருக்கறதுதான். இந்த வாசல யாரும் பயன்படுத்தி பாத்ததே இல்ல. இந்த வாசல திறக்கற சக்தியோட ஒரு சில பேர்தான் பிறந்திருக்காங்க. ஒவ்வொரு தலைமுறைக்கும் இந்த எண்ணிக்கை குறைஞ்சுட்டே வரும்னு வரலாறு சொல்லுது. போஸ்டர்னிஸ்ல பிறந்தவங்களுக்கு மட்டும்தான் இந்த வாசலத் திறக்கற சக்தி உண்டு. எனக்குத் தெரிஞ்சவரைக்கும் கடைசியா பயணம் செய்தவரு போன தலைமுறைலதான் இறந்து போனாரு. உன்னப் பாத்தா நீ இந்த உலகத்துல உள்ளவ இல்லன்னு நல்லாவே தெரியுது. யார் உன்ன இங்க கொண்டு வந்தது? நீ எங்களோட எதிரிகள் கூட கூட்டணி வச்சிருக்கியா?" முன்பாகச் சாய்ந்திருந்த அவன் இப்போது சிறிது பின்னே நகர்ந்து கொண்டான். அவன் கையின் முட்டிகளும், தாடையும் இறுகி இருந்தது எனக்குத் தெரிந்தது.

"ஆமா, ஏட்ரியன் நான் உங்க படைக்குள்ள ஊடுருவி தாக்கறதுக்காகத்தான் இந்தக் கத்தியோட வந்துட்டேன். நீங்க என்னக் கைதியாப் பிடிச்சுட்டீங்க." என் பைக்குள் இருந்த கத்தியை நான் வெளியே எடுத்தேன். அதைத் திறந்து அவனுக்கு நேராக நீட்டியபடி சொன்னேன், "பாத்தீங்களா என்னோட ராணுவ ஆடை எப்படி இருக்குதுன்னு" என் இரவு ஆடையைக் காட்டி கிண்டல் செய்தேன்.

அவனது தோள்கள் இப்போது சிறிது தளர்ந்திருந்தன. சந்தேகம் சிரிப்பாக மாறியிருந்தது. அவனது கேள்வியின் பைத்தியக்காரத்தனத்தை அவனே புரிந்து கொண்டான். நான் வந்த முறை அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. என்னை மீண்டும் அனுப்பி வைக்கும் சக்தி அவனுக்கு இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. ஆனால் இப்போது அதற்கு வழி இல்லை என்று தெரிந்ததும் எனது மனம் சோர்ந்து போனது.

"மன்னிச்சுக்கோ, ரொம்ப காலமா நாங்க போர்ல இருக்கோம். அதனாலத்தான் பயந்துட்டேன். உன்ன யாரு இங்க கூட்டிட்டு வந்தாங்கன்னு உனக்குத் தெரியாது அப்படித்தானே?"

"யாரும் என்ன இங்க கூட்டிட்டு வரல. நான் தனியாத்தான் வந்தேன்." சொல்லிக் கொண்டே என் கத்தியின் கூர்மையான பகுதியை அதன் பிடிக்குள் மடக்கி வைக்கும் போதுதான் நேத்தனின் நினைவு எனக்கு வந்தது. வீடு நினைவுக்கு வந்தது. என் குடும்பத்தையும் நண்பர்களையும் இனிமேல் பார்க்காமல் போய்விடுவோமோ என்ற எண்ணம் என் மனதுக்குள் வந்தது. என் கண்களில் தானாகவே நீர் சுரந்தது. நான் அதைத் துடைத்துக் கொண்டேன். நம்பிக்கை மங்கிப்போகத் துவங்கியிருந்தது. காலம் கடந்து விட்டது. ■ ■ ■

*Editorial Team :* ***Jeswyn, Jesudoss, Prem, Wilbert & Mic Yell***
*Cover Photo & Design :* ***Jeba Prakash*** *Pages :* ***38***
***For free PDF*** *copy Please Contact :* **kurutholaimag@gmail.com**
*Facebook :* ***@kurutholai*** *For More Details :* **9442269002**
**எழுத்தாளர்களின் அனுமதியுடன் படைப்புகள் வெளியிடப்படுகின்றன**